# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 11 திங்கட்கிழமை (27-07-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 206


## உவர்மலைப்பகுதியில் படையினர் தேடுதல்

திருகோணமலை, ஜூலை 27

திருகோணமலை உவர் மலைப் பகுதியில் நேற்று பாரிய தேடுதல் இடம்பெற்றது.

அந்தப்பகுதியைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் விவேகானந்த வித்தியாலயத்துக்கு அழைத்து வரப்பட்டு முகமூடி முன் நிறுத்தப்பட்டனர்.

காலை முதல் மாலை வரை இடம்பெற்ற தேடுதலில் எவரும் கைது செய்யப்படவில்லை.

(இ-3)

## சார்க்மாநாடு ஆரம்பமாகமுன் சந்திரிகாவை கொல்ல முயற்சி

### கொழும்பில் 8 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூலை 27

கொழும்பில் நடைபெறவிருக்கும் சார்க் மாநாட்டுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கொலை செய்யத் திட்டமிட்டதாக எட்டுப் பேரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதம் 22 ஆம் திகதி கொழும்பில் கலை நிகழ்ச்சி ஒன்றில் அவரைக் கொலை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாகவும் —

மனித குண்டாக செல்லவிருந்த ஒரு பெண்ணைக் கைது செய்தபோது இந்த விவரங்கள் தெரிய வந்ததாகவும் — பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (இ-3-9)

## ஈழ அகதிகள் 44பேர் படகு கவிழ்ந்து பலி!

### இராமேஸ்வரம் கடலில் சனி நள்ளிரவு சம்பவம்

சென்னை, ஜூலை 27

மன்னார் மாவட்டம், இலுப்பைக்கடவையில் இருந்து 50 அகதிகளுடன் இராமேஸ்வரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு ஒன்று இராமேஸ்வரம் கரையில் இருந்து 10 கடல் மைல் தூரத்தில் பாக்குநீரிணையில் மூழ்கியதில் 44 அகதிகள் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;-

இலுப்பைக்கடவையில் இருந்து நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு பிளாஸ்டிக் படகில் 50 அகதிகள் இராமேஸ்வரம் நோக்கி பயணமானார்கள். இந்தப் படகில் இரு படகோட்டிகளும் இருந்தனர்,

இராமேஸ்வரத்துக்கு 10 கடல் மைல் தூரத்தில், கடுங்காற்று, கடற்கொந்தளிப்பு காரணமாக படகுக்குள் நீர் புகுந்ததால் படகு கடலில் மூழ்கியது.

இரவு 12.00 மணியளவில் நீர் புகுந்த சமயம் படகில் இருந்தவர்கள் நீரை வெளியேற்ற பெருமுயற்சி எடுத்தனராயினும், அந்த முயற்சி பயன் அளிக்காத நிலையில் அதிகாலை 2.30 மணியளவில் படகு கவிழ்ந்ததாக தப்பி இராமேஸ்வரத்தை அடைந்த லக்ஷ்மன் என்பவர் தெரிவித்தார்.

படகில் பயணம் செய்தவர்களில் 4 பேர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தசமயம் தமிழக மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்தனர்.

மற்றும் நால்வர் நீந்திக் கரைசேர்ந்தனர். இச்சம்பவத்தில் கடலில் மூழ்கியவர்கள் எனக் கருதப்படும் 44 பேரில் 15 பெண்களும், 5 குழந்தைகளும் அடங்குவர்.

## நீர்கொழும்பில் குண்டு

கொழும்பு, ஜூலை 27

நீர்கொழும்பு புனிதசெபஸ்ரியான் தேவாலயத்துக்கு முன்பாகவுள்ள மின்மாற்றியில் வைக்கப்பட்டிருந்த அதிசக்திவாய்ந்த நேரம் குறித்து வெடிக்கும் குண்டு ஒன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டுச் செயலிழக்கச் செய்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கறுப்புப் பட்டி தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலையில் 15 ஆவது நிறைவையொட்டிய கறுப்புப்பட்டி தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ ஆகிய தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தக் கறுப்புப்பட்டி தினத்தை அனுஷ்டிக்க உள்ளன—

பாடசாலை மாணவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## சடலங்களைக் கண்டுபிடிப்பதற்கு ஹெலிகளின் உதவியுடன் தேடுதல்

சென்னை, ஜூலை 27

இராமேஸ்வரம் கடற்பகுதியில் ஈழ அகதிகளுடன் சென்ற படகு கவிழ்ந்ததில் காணாமற்போனோரின் சடலங்களைத் தேடி ஹெலிகளின் உதவியுடன் பாரிய தேடுதல்கள் நேற்று முழுநாளும் இடம் பெற்றன.

படகு கவிழ்ந்த தகவலை கரை சேர்ந்தவர்கள் தெரிவித்ததையடுத்து கடலோரக் காவல் படையும், கடற்படையும் இணைந்து தேடுதல்களை ஆரம்பித்தன.

ஹெலிகளின் உதவியுடன் கடற்படைக் கப்பல்கள் இரண்டு இந்தத் தேடுதலில் நேற்று மாலை வரை ஈடுபட்டன.

சடலங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

கடலில் கடும் காற்று வீசுவதால் சடலங்கள் இலங்கைக் கரைப்பக்கமே அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

(இ-3)

## பகிடிவதை சென்னையில் மாணவி பலி!

சென்னை, ஜூலை 27

சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி மாணவி சரி

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப அகதிகளின் அவல

## இந்தியா தலையிடுமாறு தமிழ்க்கட்சிகள் கோரும்

கொழும்பு, ஜூலை 27

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா தலையிட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் தமிழ்க் கட்சித்தலைவர்கள் கோரவுள்ளனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி இந்திய தூதரகம் ஏற்பாடு செய்துள்ள விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளும் போதே அவர்கள் வாஜ்பாயிடம் இந்தக்கோரிக்கையை விடுக்க விருக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக இ.தொ.கா தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் மகஜர் ஒன்றைவாஜ்பாயிடம் சமர்ப்பிக்கவிருக்கிறார்.

இதற்கு முன்னர் வாஜ்பாய் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-10-5)

## நல்லூர் உற்சவத்தை ஒட்டி ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 27

நாளை ஆரம்பமாகவிருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஊரடங்கு நாளை முதல் தளர்த்தப்பட்டுள்ளதாக 51 ஆவது படையணிச் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாளை முதல் 17 ஆம் திகதி வரை இரவு 9-00 மணி முதல் அதிகாலை 4-00 மணிவரையும் —

17 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை இரவு 11-00 மணி முதல் அதிகாலை 4-00 மணி வரையும் — ஊரடங்கு அமுலில் இருக்கும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் இரவு 9-00 மணி முதல் அதிகாலை 5-00 மணி வரை ஊரடங்கு அமுலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

### உள்ளூராட்சிச் சபைகள்:

## ரெலோ உறுப்பினர்கள் புதனன்று பதவி ஏற்பர்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட ரெலோ உறுப்பினர்கள் 18 பேரும் எதிர்வரும் புதன்கிழமை பதவிப் பிரமாணம் செய்துகொள்ள உள்ளனர்.

ஜனவரி 29 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட ரெலோ உறுப்பினர்கள் இதுவரை பதவி ஏற்காதது தெரிந்ததே.

அரசு — விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை ஆகிய கோரிக்கைகளைமுன்வைத்து உள்ளூராட்சி சபைகளை குறிப்பிட்ட காலம் ரெலோ பகிஷ்கரித்து வந்தது.

(10 ஆம்பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். / ஈச்சமோட்டை, கலட்டிப்புலம்
அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்

## ஆடிப்பூர உற்சவம்

மேற்படி உற்சவம் இன்று (27-07-98) திங்கட்கிழமை காலை 10 00 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து நண்பகல் அன்னதான வைபவம் இடம்பெறும்.

மாலை 3.00 மணிக்கு சமயச் சொற்பொழிவும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சாயரட்சை பூசையும், மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் சுவாமி உள்வீதி வலம் வருதலும் இடம் பெறும்.

மாலை 3.00 மணி; சமயச் சொற்பொழிவு
விடயம்: 'அவள் அறியா அமரரும் இல்லை'
நிகழ்த்துபவர்:
திரு. ஆறு. திருமுருகன் B. A. (ஆசிரியர்)

(57891) பரிபாலன சபையினர்

## ராகம்ஸ் பட்டுச்சோலை

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு

யாழ். ராகம்ஸ் பட்டுச் சோலை ஸ்தாபனத்தினர் இன்று 27-07-98 திங்கட்கிழமை 12 மணியளவில் பருத்தித்துறை வீதி, நல்லூரில் (நல்லூர் ஆலயம் முன்பாக) தமது கிளை ஸ்தாபனத்தைத் திறந்து வைக்கவுள்ளார்கள் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

ராகம்ஸ்பட்டுச்சோலை
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

ராகம்ஸ்பட்டுச்சோலை
24, நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.

(57893)

## ஆழ்ந்த அனுதாபம்

### வீரசிங்கம் கணேசன்

(முன்னாள் ஆசிரியர்)

அவர்களின் மறைவு குறித்து நாம் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்

அராலி
(57897) சரஸ்வதி பாலர் பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி

சிவதர்ம வள்ளல்

### க. கனகராசா (ச. நீ)

மன்னுமிவ் வுலகில் மாண்புற வாழ்ந்து
தன்னலங் கடிந்து பொது நலம் பெருக்கித்
தமிழும் சைவமும் தழைத்திட உழைத்து
அழியாப் புகழுன தாக்கினை ஐயா.

அஞ்சலித்து நிற்கின்றோம்

சைவ முன்னேற்றமன்றம்.

ஏழாலை. (சி/4394)

## கண்ணீர் அஞ்சலி

எமது புவியியற்றுறை தலைவர்
கலாநிதி கா. குகபாலன் அவர்களின்
அன்புத் தந்தை

### சண்முகம் கார்த்திகேசு

அவர்களின் பிரிவால் துயரமுறும் குடும்பத்தார்க்கும், உறவினர்க்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மூன்றாம் வருடம்,
புவியியற் சிறப்புக்கலை மாணவர்கள்,
(57894) யாழ். பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக முன்னாள் தலைவரும்
இந்நாள் வலயத் தலைவருமான
லயன் கலாநிதி கா. குகபாலன்
அவர்களின் தந்தையார்

### சண்முகம் கார்த்திகேசு

அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்குப்
பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
யாழ். லயன்ஸ் கழகம்.

(சி/4393)

## ஆறு ஓவர் கிரிக்கெட்

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சென்ற லைடஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மத்திய கல்லூரியின் நிறுவுனர் தினை சுழல் கேடயத்துக்கான ஆறு பேர் கொண்ட ஆறு ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:

★ ஜொலிஸ்ரார் எதிர் ஸ்ரான்லி வி. க.

★ வர்த்தக வங்கி எதிர் ஜொனியன்ஸ். (இ-3)

## ஆளுநர் பதவிக்கு ரஞ்சி சேனநாயக்க

வடமத்திய மாகாண ஆளுநர் பதவிக்கு நான்கு பெயர்கள் அரசினால் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

காலஞ் சென்ற ஆளுநர் மைத்திரிபால சேனநாயக்காவின் மனைவி ரஞ்சி சேனநாயக்கவும் அவர்களில் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-21)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்.
அகல வெண் திரையில்
ஒன்பது வருட இடைவெளியின் பின் மீண்டும் திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள் காண்பிக்கப்படுகின்றன.
4 ஆவது வெற்றி வாரமாக
சுப்ப ஸ்டார் ரஜனி
மீனா - செந்தில்,
வடிவேல் நடித்த
முத்து
(சினிமாஸ்கோப்)
காட்சிகள்:- 10-30, 2-30
(57888)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
திங்கள், செவ்வாய்
விஜய் நடித்த
ப்ரியமுடன்
புதன், வியாழன்
விஜயகாந்த் - ரேவதி
நடித்த
வைதேகி
காத்திருந்தாள்
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No: 070 - 212223
(57502)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கமல் (இரு வேடம்)
மொனிஷா, சுகன்யா,
கவுண்டமணி, செந்தில்
நடித்த
இந்தியன்
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4336)

யாழ்.
## றீகல்
வெண் திரையில்
இன்று முதல்
10-30, 2-30 மணி
A. R. ரகுமான்
இசையில்
அரவிந்சுவாமி
மதுபாலா நடித்த
ரோஜா
(CD வெளியீடு)
இனிய பாடல்களுடன்
காஷ்மீர் தீவிரவாதிகளின்
[illegible]
[illegible]
ஆங்கிலத் திரைப்படம்.
(57901)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்பலம் தங்கமணி

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தச்சன்தோப்பு கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் தங்கமணி அவர்கள் காலமாகி விட்டார்

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், ஆறுமுகசாமி (தொழில் நுட்ப உத்தியோகத்தர் மாநகர சபை) நித்தியானந்தன் (பாறின்) திருமதி வி. கனகம்மா திருமதி க. இராஜேஸ்வரி, பஞ்சாட்சரம் (பாறின்) திருமதி ப. ஞானேஸ்வரி, திருமதி சு. செல்வராணி (லண்டன்) நந்தகுமார் [லண்டன்] கண்ணதாசன் ஆகியோரின் அன்பு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் [27-7-1998] இன்று நண்பகல் 12 மணிக்கு இல. 34 செட்டித் தெரு, நல்லூர் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பி. ஆறுமுகசாமி
(மகன்)

இல. 34, செட்டித்தெரு,
நல்லூர்.

(57882)

### ஆறுமுகம் அன்னம்மா

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த ஆறுமுகம் அன்னம்மா 26-07-1998 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற R. T. ஆறுமுகம் (முன்னாள் வர்த்தகர், நொச்சியாகம) அவர்களின் அன்பு மனைவியும், கந்தசாமி (Accountant), காலஞ் சென்ற துரைச்சாமி. காலஞ் சென்ற பொன்னம்பலம், ஜெயலட்சுமி, செல்வராணி, பராசக்தி, புனிதவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா (கணேசன் ஸ்ரோர்ஸ்), பத்மசிங்கம் (வர்த்தகர், அப்புத்தளை), தியாகராசா (C. T. B.), இராஜரட்ணம் (Star line Printers), இந்திராதேவி, நாகம்மா, நவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், இலட்சுமிப்பிள்ளை (மலேசியா), காலஞ் சென்ற இராமநாதன், பொன்னம்பலம் (மலேசியா), டாக்டர் சங்கரப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், காலஞ் சென்ற சண்முகம், பூரணம், காலஞ் சென்ற புஸ்பலீலா, பகவதிஅம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-07-98) திங்கட்கிழமை மட்டக்குழியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
செ. கந்தையா
(மருமகன்)

124, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(57889)

### வீரசிங்கம் கணேசன்

(அராலி)

தெல்லிப்பளை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் வீரசிங்கம் கணேசன் (25 - 07 - 98) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெயபவானி, ஜெயபவன் (கணக்காளர், லண்டன்), மணிபவன் (பொறியியலாளர், அமெரிக்கா), பத்மபவன், Dr. கிருஸ்ணபவானி (அரசினர் வைத்திய சாலை, யாழ்ப்பாணம்), சுகுணபவானி (நீதிமன்ற ஆணைக்குழு, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகராசா (சிமெந்துக் கூட்டுத்தாபனம், K. K. S.), சூரியஜோதி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், பரமேஸ்வரி, மங்களேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்றவர்களான யோகநாதன், அற்புதநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும். க. கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியர், கொழும்புத்துறை), நவரத்தினம் (கட்டட ஒப்பந்தகாரர், அராலி), முத்துமாரி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி

அராலி தெற்கு,
அராலி.

(57896)

### அந்தோனி பாவிலுப்பிள்ளை

வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டு புலோலியில் அன்ரன் கடை அருகில் வசித்து வந்தவரும், பாவிலு மரியம்மாவின் அன்புக் கணவருமாகிய அந்தோனி பாவிலுப்பிள்ளை காலமானார்.

இவர் அடைக்கலம், அந்திரோஸ், லூர்த்தம்மா யேசுதாசன், யோசேப், பிலோமினா, செபமாலையம்மா கபிரியேல் (இத்தாலி), ஞானம் (ஜெமன்), மரியாம்பிள்ளை (சுவீஸ்), செபஸ்ரியன் (ஜெமன்) ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், பேதுறுப்பிள்ளை, மேரிறெஜினா, ஆரோக்கியநாதர், காலஞ்சென்ற அன்னம்மா (பூமணி), பார்பறம்மா, லூஜியா அந்தோனிப்பிள்ளை, இராஜேந்திரம் (உபதபாலகம் முள்ளியான்), மேரிறோசா, இருதயசீலி (இத்தாலி), கெலன் (ஜெமன்), ராதிகா (சுவீஸ்), சபினா (ஜெமன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-7-98) திங்கள் காலை 9-30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கிறிஸ்தவ நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
P. யோசப்
(மகன்)

(57900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவில் இம்முறை கடும் மழை பொழியும்!

ஹொங் கொங், ஜூலை 27

'லா—நினா' எனப்படும் கால நிலைத் தன்மையால் ஆசிய நாடுகள் இவ்வாண்டு கடும் மழைப் பொழிவைச் சந்திக்க நேரிடும் என்று வானிலை அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

'எல்—நினோ' என அறியப்பட்ட வழமைக்கு மாறான காலநிலை காரணமாகக் கொடிய வரட்சியைச் சந்தித்த ஆசிய பிராந்தியங்களில் இந்த ஆண்டில் அடை மழை கொட்டும் எனக் கணிப்பிடப் பட்டிருக்கிறது.


இந்து சமுத்திரத்தையும், பசுபிக் சமுத்திரத்தையும் எல்லைகளாகக் கொண்ட நாடுகளில் 'லா—நினா' வின் தாக்கம் கடுமையாக உணரப்படும் என்று ஆஸ்திரேலியாவின் பொதுநலவாய விஞ்ஞானக் கைத்தொழில் ஆய்வு அமைப்பின் (CSIRO) கால நிலை ஆய்வாளர் றொப் அலன் (ROB ALLAN) தெரிவித்தார்.

பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின்கால நிலையில் 'லா—நினா' வின் தாக்கம் ஏற்கனவே உணரப்பட்டிருப்பதாகவும்—

மிக மோசமான வெள்ளம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தை இது ஏற்படுத்தியிருப்பதாகவும் அந் நாடுகளைச் சேர்ந்த வானிலை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சீனா, பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் ஆகியன ஏற்கனவே வெள்ள அபாயங்களை எதிர்நோக்கி உள்ளன. 'லா—நினா' இலங்கையிலும் இம்முறை பருவகாலத்தில் அதிக மழைப் பொழிவை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ)



பேய்ஜிங், ஜூலை 27

6 மீற்றர் உயரத்துக்கு மேல் வெள்ளம் சூழ்ந்துள்ள சீனக் கிராமம் ஒன்றில் சிலர் படகு மூலம் பயணம் செய்வதை படத்தில் காணலாம். சீனாவின் ஜியாங்ஸி மாகாணத்தில் மழை வெள்ளப் பெருக்கு மோசமடைந்துள்ளது. தென் சீனாவில் வெள்ள அனர்த்தத்தினால் இந்த ஆண்டில் இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

(படம்: ஏ.எவ்.பி.)

# ஏழு இந்திய விஞ்ஞானிகளை அமெரிக்கா வெளியேற்றியது!

## 75 ஆய்வாளர்களும் அனுப்பப்படுவர்

வாஷிங்டன், ஜூலை 27

அமெரிக்காவில் பணியாற்றி வரும் இந்திய விஞ்ஞானிகளில் ஏழு பேரை நாட்டை விட்டு வெளியேறுமாறு அமெரிக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது.

பல்வேறு ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள வேறு 75 இந்திய விஞ்ஞானிகளையும் அமெரிக்கா விரைவில் வெளியேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா அண்மையில் நடத்திய அணு பரிசோதனைகளைத் தொடர்ந்து அந்நாட்டுக்கு எதிராக அமெரிக்கா எடுத்துவரும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே இது கருதப்படுகிறது.

"அறிவியல் தொழில் நுட்பத்துறையில் இந்தியாவுடனான உறவு குறித்து தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது" என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

"அமெரிக்காவில் பணியாற்றி வரும் மேலும் சில இந்திய விஞ்ஞானிகளையும் வெளியேற்ற வேண்டுமா என்பது குறித்து பரிசீலனைக்குப்பின் முடிவு செய்யப்படும்" — எனவும் அந்த வட்டாரங்கள் கூறின.

வெளியேற்றப்பட்ட மற்றும் வெளியேற்றப்பட இருக்கும் விஞ்ஞானிகள் இரு நாடுகளுக்கும் இடையிலான 'விஞ்ஞானிகள் பரிமாற்றத் திட்டம்' மற்றும் 'சிறப்பு உறுப்பினர் அந்தஸ்து' ஆகியனவற்றின் அடிப்படையில் அமெரிக்காவில் பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அணுசக்தி ஏவுகணைத் தொழில் நுட்ப திட்டப்பணிகளில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளை வெளியேற்றுவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் — என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-10)

## 'தலிபான்' பாணியில் திருடர் கைவரிசை

ஆப்கானிஸ்தானில் சில திருடர்கள் தலிபான்மதப்பொலிஸார் போல வேடமிட்டு மக்களின் வீடுகளுக்குச் சென்று தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பறிமுதல் செய்து வருவதாக தலிபான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலிபான்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஆப்கானிஸ்தானில் பொதுமக்கள் தொலைக்காட்சி பார்ப்பது தடைசெய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

தீய பழக்கங்களை அடக்கி நல்ல குணங்களை ஊக்குவிக்கும் அமைச்சால் இத்தடை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் மிகச் சாதுரியமான சில திருடர்கள் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி பெரும் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாகவும்—

இது தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும்—

'ஷரியத்' வானொலி அறிவித்துள்ளது.

உண்மையான அதிகாரிகள் இரவுவேளை நடவடிக்கையில் ஈடுபடமாட்டார்கள் எனவும் அந்த ஒலிபரப்புக் கூறியது.

இத்துடன் உண்மையான அதிகாரிகள் அடையாள அட்டை வைத்திருப்பார்கள் என்றும் மக்களுக்கு குற்றத்தின் தீவிரத்தை உணரச் செய்வதற்காக மத அறிஞர் ஒருவரும் அவர்களுடன் கூடவே வருவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)

## கம்போடியாவில் வாக்களிப்பு முடிவு!

நொம்பென், ஜூலை, 27

கம்போடியாவில் நேற்று முடிவடைந்த பொதுத்தேர்தல் வாக்குகளை எண்ணும் பணி நடைபெற்று வருகிறது. முடிவுகள் பெரும்பாலும் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாக்களிப்பு பெரும்பாலும் அமைதியாக நடைபெற்றதாக சர்வதேச அவதானிகள் தெரிவித்தனர்.

இத் தேர்தலில் இரண்டாவது பிரதமர் ஹுன் செனும், அவரால் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்ட முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் றணரித்தும் போட்டியிட்டனர்.

தேர்தல் பிரசார காலத்தில் பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

(ஐ)

# அமெரிக்க காங்கிரஸ் அமைந்துள்ள கட்டடத்தினுள் ஆயுதபாணி சூடு!

## 2 பொலீஸார் பலி!

வாஷிங்டன், ஜூலை 27

வாஷிங்டனில் அமெரிக்க காங்கிரஸ் மன்றத்தின் இரு அவைகளும் அமைந்துள்ள 'கபிரோல்' கட்டடத்தினுள் புகுந்த ஆயுதபாணி ஒருவர் திடீரென நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு பொலீஸார் உயிரிழந்தனர்; வேறு சிலருக்கு காயம் ஏற்பட்டது.

தாக்குதலை நடத்திய நபர் காயமடைந்த நிலையில் கைதுசெய்யப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ஆயிரக் கணக்கில் உல்லாசப் பயணிகளும், பொதுமக்களும், அரசியல் பிரமுகர்களும் வந்து செல்லும்— கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த— இக்கட்டடத்தினுள் இடம்பெற்ற இச் சூட்டுச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கட்டடத்தினுள் துப்பாக்கியுடன் நுழைந்த அந்த நபர் உள்ளே ஊடுருவி குண்டுகள் மற்றும் ஆயுதங்களைப் பரிசோதிக்கும் 'மெற்றல் டிக்டெக்ரரை'யும் தாண்டிச் சென்றபோது அங்கு கடமையில் இருந்த பொலீஸார் அவரைத்தடுக்க முற்பட்டனர். அச்சமயம் துப்பாக்கிச் சமர் ஏற்பட்டது.

முக்கிய அரசியல் பிரமுகர் எவரினதும் உயிருக்கு உலைவைப்பதற்காகவே அந்த நபர் அங்கு நுழைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

சுமார் 40 வயது மதிக்கத்தக்க அந்த நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் ஒரு மனநோயாளி என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தை அடுத்து 'கபிரோல்' கட்டடத்தில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

(ஐ)

## 4 முஸ்லிம்கள் சுட்டுக் கொலை

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

போடோ மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதத்தில் இந்து மதத்தைச் சேர்ந்த 25 பேர் முஸ்லிம் போராளிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட கிராமம் ஒன்றில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

உலக அரங்கில்

இச் சம்பவம் சென்ற மாதம் நடைபெற்ற இந்துக்களின் படுகொலைகளுக்கு பதிலடி கொடுக்கும் நோக்கத்தில் நடைபெற்றிருக்கக் கூடும் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ஐ-6)

### பப்புவா நியூகினி இயற்கை அனர்த்தம்

# நோய்கள் பரவும் ஆபத்தை அடுத்து நூற்றுக்கணக்கில் சடலங்கள் எரிப்பு!

போட்மொரஸ்பி, ஜூலை 27

பப்புவா நியூகினியின் வடமேற்குப் பகுதியில் கடந்த வெள்ளியன்று ஏற்பட்ட பெரும் இயற்கை அனர்த்தத்தில் சிக்கி ஏதிலிகளாகியுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களைத் தொற்றுநோய்கள் தாக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அங்குள்ள மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த ஆயிரக்கணக்கானோரின் சடலங்கள் அப்பிரதேசம் எங்கும் பரந்து கிடக்கின்றன. அடக்கம் செய்ய ஆள்களின்றிக் கிடக்கும் பிணங்களால் நோய்கள் வேகமாகப்பரவும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. எனவே சடலங்களை ஆங்காங்கே எரித்துவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடலில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக எழுந்த கடற்பெருக்கில் எட்டுக்கு மேற்பட்ட கிராமங்கள் அடித்துச் செல்லப்பட்டு விட்டன.

காணாமற்போன மேலும் ஆயிரக்கணக்கானோர் என்னவானார்கள் என்பது இன்னும் தெரியவில்லை.

(ஐ)

### பங்களாதேஷில்

# வெள்ள அபாயம்

டாக்கா, ஜூலை 27

பங்களாதேஷில் மேலும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் இருப்பதனால் எதற்கும் ஆயத்தமாக இருக்குமாறு பிரதமர் ஷேக் ஹசீனா மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டதன் பின்னர் பிரதமர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தற்போதைய நிலையில் சர்வதேச உதவியை கோர முடியாது என்றும், எனினும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் பட்சத்தில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் என்றும் — அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கூடிய விரைவில் நாட்டில் இன்னொரு பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாக பங்களாதேஷ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பலவர்ண கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு. இல. 131 (251), அரசடி றோட், கந்தர்மடம் சந்தி அருகில், யாழ்ப்பாணம்.

[57848]

### தவறிவிட்டது

செ. சிவம்சோதி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் கடந்த 22-07-98 அன்று வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் பஸ்சில் பிரயாணம் செய்யும் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் செ. சிவம்சோதி துன்னாலை தெற்கு, கரவெட்டி எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

[57883[

இராசரத்தினம் மலர் (இல. 525433110V), ஈஸ்வரம்பிள்ளை தங்கமலர் இல. 646811236V ஆகியோரது அடையாள அட்டைகள் 24-07-98 அன்று 782. இலக்க பேருந்தில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் துர்க்கா ஸ்ரோர்ஸ், மாவடிச் சந்தியில் ஒப்படைக்கவும்.

[57870]

### தேவை

யாழ்ப்பாணம் நகரசபை திருநெல்வேலி பிரதேச எல்லைக்குள் வீடு விலைக்குத் தேவை. விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். இல. 765, மே/பா உதயன்.

[57867]

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் அராலியூர் சுந்தரம்பிள்ளை வீரகேசரியில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு. உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் வாசித்தனர். நீங்களும் வாசியுங்கள். அவர்களுக்கும் அனுப்புங்கள் ரூபா 50.

[57705]

### சேவல் குஞ்சுகள்

பகிரா பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. விலை 25 ரூபா மட்டுமே. மல்லிகாபதி, சந்தை முன்ஒழுங்கை, மானிப்பாய்.

[57849]

# கண்ட கண்ட இடங்களில் பஸ் மறிக்கும் பயணிகள்

## சாரதிகள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 27

வீதிகளில் பஸ்கள் தரித்துச் செல்வதற்கான இடங்களில் உரிய அடையாளங்கள் இடப்படாததால் பஸ் சேவைகளில் தாமதம் ஏற்படுவதாக பஸ் சாரதிகள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

பஸ் தரித்துச் செல்வதற்கான அடையாளங்கள் இல்லாமையினால் பிரயாணிகள் தாம் விரும்பிய இடங்களில் நின்று பஸ்சை மறிப்பதால் குறிக்கப்பட்ட நேரத்திற்குள் பஸ்சை செலுத்த முடியாதுள்ளது.

பிரதேச சபைகள் தமது எல்லைக்குட்பட்ட வீதிகளில் பஸ்தரித்துச் செல்வதற்கான அடையாளக் குறியீடுகளைக் குறித்து வைத்தால் பஸ் சேவையை தாமதம் ஏதுமின்றி நடத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)

# வீடமைப்பு அதிகார சபை:

## தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கைகள்

வலிகாமம்மேற்கு, ஜூலை 27

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கொழும்பிலுள்ள தலைமைச் செயலகத்தில் இருந்து தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கைகள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

அண்மையில் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்திஅதிகாரசபைக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை தவிர்ந்த ஏனைய கிராமங்களை நகரங்களாக அடையாளம் காணுதல் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய அறிவுறுத்தல்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அந்த சுற்றறிக்கையின் பிரதிகளை யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபையினர் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

(ஐ)

# ஆடி அமாவாசை அன்று

## காரைநகர் கடலிலும் பக்தர்கள் நீராடினர்

கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள காரைநகர் தீர்த்தக் கரையில் ஆடி அமாவாசைத் தினத்தன்று இம்முறை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தீர்த்தம் ஆடினார்கள்.

ஈழத்துச் சிதம்பர மண்டலாபிஷேகத்தைப் பார்ப்பதற்கு யாழ். நகரின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து வந்திருந்த காரைநகர் அடியார்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்து மறுநாள் ஆடி அமாவாசை அன்று தீர்த்தம் ஆடிச் சென்றதையும் காண முடிந்தது.

இம் முறை காரைநகர் மேற்குப் பகுதி வியாவில் கடற்கரையிலும் தீர்த்தம் ஆடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததால் அப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மக்களும் அங்கு தீர்த்தமாடினர்.

(ஐ-100)

# ஆடி அமாவாசை தீர்த்தம் ஆயிரக்கணக்கான பக்தர்

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கீரிமலையில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற ஆடி அமாவாசைத் தீர்த்தத்தில ஆயிரக்கணக்கில் பக்தர்கள் பங்குகொண்டனர்.

அன்று காலை முதலே தெல்லிப்பழை சோதனைச் சாவடியில் கூடிய மக்கள் கீரிமலை சென்றனர்.

தெல்லிப்பழையில் இருந்து பக்தர்கள் செல்ல விசேட பஸ் சேவையை வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஏற்பாடு செய்திருந்தது.

அன்று மாலை 6 மணி வரை அங்கிருந்து பக்தர்கள் தெல்லிப்பழைக்கு வந்து சேர்ந்தனர்.

ஆடி அமாவாசை விரதம் அனுஷ்டித்த பலர் அன்று மாலையே தமது வீடுகளுக்கு திரும்பமுடிந்ததாகக் குறைப்பட்டனர்.

இது பற்றி வடபிராந்திய போக்குவரத்துச்சபை அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது காலையில் எமது சேவை சிறப்பாக இடம்பெற்றது. ஆனால் மாலையில் எமக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் சேவையைச் சிறப்பாக நடத்த முடியாத நிலை ஏற்பட்டது என்று தெரிவித்தார்.

(இ-8)

# வழுக்கையாறு பாலம் திருத்தப்படும்

வலி, தென்மேற்கு, ஜூலை 27

நவாலி – வழுக்கையாறு பாலம் விரைவில் திருத்தப்படவுள்ளது.

தற்போது வழுக்கையாறு வீதி திருத்தப்பட்டு வருகிறது.

(ஐ-185)

# மின் கம்பங்கள் சரிந்து விழும் ஆபத்து

வலி. தென்மேற்கு, ஜூலை 27

நவாலிவடக்கு— சோமசுந்தரப்புலவர் வீதியில் உள்ள இரும்பு மின்கம்பிகள் உடைந்து வீடுகளுக்கு மேல் சரியும் நிலையில் உள்ளன.

கடந்த சுமார் நாற்பது வருடத்திற்கு முன்னர் நடப்பட்ட இந்த மின் கம்பங்கள் உக்கிய நிலையில் உள்ளன.

இதேவேளை மின்வயர்களும் அறுந்து தொங்குகின்றன.

(ஐ-185)

# நினைவுத் தூபிகளை புனரமைக்க வேண்டும்

## பிரதேச சபை கோரிக்கை

இனந் தெரியாதவர்களினால் சேதமாக்கி அழிக்கப்பட்ட நினைவுத் தூபிகளை மீண்டும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நெடுந்தீவுப் பிரதேச சபையின் முதலாவது அமர்வின் போது தீர்மானிக்கப்பட்டது.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் முதல் அமர்வு 20 வருடங்களின் பின் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குச் சபையின் மண்டபத்தில் இடம் பெற்றது.

புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி அமர்வில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

பிரதேசசபை அலுவலகத்திற்கு அண்மையிலும், உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆகியவற்றின் முன்பாக அமைந்திருந்த நினைவுத் தூபி இனந்தெரியாதோரால் இரவோடு இரவாக இடிக்கப்பட்டதையிட்டு இச் சபை தமது கண்டனத்தைத் தெரிவிப்பதுடன் தூபியைத் திரும்பவும் புனரமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோருகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாகத் தற்போது வழங்கப்பட்டுவரும் உலர் உணவு பெறுவோரில் இருபத்தைந்து சதவீதம் வெட்டப்படல் வேண்டும் என்ற அரசாங்கத்தின் முடிவு மனிதாபிமானமற்ற செயலாகும். இதனால் இத் தீவக மக்கள் பலர் மீண்டும் சொல்லொணாத் துயரை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். எனவே, மக்கள் வாழ்க்கை வழமைக்குத் திரும்பும்வரை அரசு நிவாரண வெட்டை அமுல் நடத்தக் கூடாது என அரசைக் கோருதல்.

செம்மணிப் புதைகுழிச் சம்பவம் தொடர்பாகப் புதைகுழிகள் உடன் தோண்டப்பட்டு உண்மை நிலையை உடன் வெளிப்படுத்த அரசைக் கோருதல் வேண்டும்.

பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிக்க உள்ளூர் பொருள்களுக்கு கணிசமான அளவு வரிகள் அறவிடு செய்யப்படல் வேண்டும். எவ்வகையான உள்ளூர் பொருள்களுக்கு வரி விதிக்கலாம் என்பவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க மூவர் கொண்ட உப சபை நியமிக்கப்பட வேண்டும்.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் வைத்திய சேவைக்காக ஆயுர்வேத வைத்திய நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படல் வேண்டும்.

பிரதேச சபைக்கான உத்தியோகத்தர்கள் பலர் நியமிக்கப்படவில்லை என்பதையிட்டு நாம் மிகுந்த கவலையடைவதுடன் எதிர்காலத்தில் போதிய அளவு உத்தியோகத்தர்களை நியமனஞ் செய்துதர யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் டக்ளஸ் தேவானந்தா, எஸ். சிவதாசன், வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி அணையாளர் ஆகியோருடன் கேட்டுக் கொள்ள வேண்டும்.

தொடக்க விழாவில் ஈ. பி. டி. பி. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கே. மோகன், எஸ். சண்முகநாதன், எஸ். தோமஸ், கே. டானியல், எஸ். றெஜிபேக்மன், ந. வி. கனகராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-111)

# மலேரியா நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கைதடி அரசினர் வைத்தியசாலையில் மலேரியா நோய்க்கான சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த மே மாதத்தில் இவ் வைத்தியசாலையில் நூறு பேருக்கு மலேரியா நோய்க்கான சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதுடன் காய்ச்சல் நோயுள்ள 153 பேருக்கு இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஜூன் மாதத்தில் 129 பேருக்கு மலேரியா நோய்க்கான சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. 270 பேருக்கு இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை — மலேரியாவுக்கான பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர் அண்மையில் இவ் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-135)

# உடுவில் கிழக்கில் 2 குளங்கள் புனரமைப்பு

உடுவில் கிழக்கு சீலம்பாய் குளம், கொடிச்சிமூலைக் குளம் இவற்றோடு இணைந்த பெருவாய்க்கால் ஆகியன ஆழமாக்கப்படவுள்ளன. இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வேலைகள் உடுவில் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் த. தேவராஜன், உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆனந்தராசா ஆகியோர் முன்னிலையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

உடுவில் வடக்கு விவசாயிகள் சம்மேளனம் மேற்படி பணிகளைச்செய்வதற்குமுன் வந்துள்ளது.

உலக உணவு ஸ்தாபனம் மேற்படி குளங்களை புனரமைக்கும் பணியில் ஈடுபடவுள்ளவர்களுக்கு வழங்கவென பத்து லட்சம் ரூபா பெறுமதியான அரிசி, மா, சீனி, ரின்மீன் போன்ற உலர் உணவுகளை வழங்கஉள்ளது.

மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்பாக இப்பணிகள் செய்து முடிக்கப்படவுள்ளன.

(ஐ-152)


# எமது இதய அஞ்சலி

மில்க்வைற் தொழிலதிபர்
சிவதர்ம வள்ளல்
**க. கனகராசா**
[ சமாதான நீதிவான் ]

மக்கள் சேவையே மகேசன் பணியெனக் கொண்டு உழைத்தவர். கல்வி முன்னேற்றமே சமூக முன்னேற்றமெனக் கொண்டு கல்விக்காக அயராது உழைத்தவர். பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியவர். அன்னாருக்கு எமது இதய பூர்வமான அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்,

இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.

(57884)



# கண்ணீர் அஞ்சலி

திருமதி
**சதயலட்சுமி மனோரஞ்சன்**
எமது கல்லூரியின் சக மாணவி
செல்வி ம. சுரேக்காவினது

அன்புத் தாயார் காலமானதையிட்டு அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பட்டப்படிப்புகள் கல்லூரி மாணவர்கள்,
[ B. A. Part I ]

( 57886 )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவியேற்பு

சண்டிலிப்பாய், ஜூலை 27

மானிப்பாய் லீஷ் லயன்ஸ் கழகத்தின் 1998/99 வருடகாலத்திற்கான புதிய நிர்வாக சபையின் பதவி ஏற்பு வைபவம் கழகத் தலைவர் செ. ஞானராசா தலைமையில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது. முன்னாள் பிராந்திய தலைவர் லயன் எஸ். பத்மநாதன் பிரதம அதிதியாகவும், பிராந்திய தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தன் சிறப்பு விருந்தினராகவும் இதில் கலந்து கொண்டனர்.

லயன் கே. தர்மராஜா தலைமையிலான புதிய நிர்வாக சபை இவ் வைபவத்தில் பதவி ஏற்றது. செயலாளராக மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒய்வுபெற்ற அதிபர் லயன் செ. கேசவராஜன் பதவி ஏற்றார்.

(ஐ-135)

## மின்சார வேலைத்தள உபகரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு ஐ. நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தால் மின்சார வேலைத்தள உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேச க்குழு கப்பல் மூலம் இந்த உபகரணங்கள் எடுத்துவரப்படவுள்ளன.

ஐ. நா. அபிவிருத்தித்திட்ட நிறுவனம் 3 கோடி ரூபாவுக்கான உதவிகளை கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வழங்க தீர்மானித்ததன் பிரகாரம் ஏற்கனவே வரைபட உபகரணங்கள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

# நல்லூர் உற்சவ கால ஏற்பாடுகள் பூர்த்தி!

யாழ்ப்பாணம், ஜூலை 27

வரலாற்று பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை இடம் பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

உற்சவகாலத்தில் ஆலய சூழலில் மேற்கொள்ளப்படவுள்ள ஒழுங்கு, சுகாதார, அத்தியாவசியப் பணிகள் தொடர்பான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

வீதிப்போக்குவரத்து, சுகாதாரசேவைகள், நீர், மின் விநியோகம் தொடர்பாக நல்லூர் இந்து விடுதியில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக்கலாநிதி இ. தெய்வேந்திரன் தலைமையில் கடந்த வியாழனன்று நடைபெற்ற கலந்துரையாடலில் இறுதித்தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

மாநகரசபை அதிகாரிகள், நல்லூர் ஆலயபிரதிநிதிகள், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

### வீதித்தடைகள்

தினமும் அதிகாலை 4.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணி வரையும் பின்னர் பிற்பகல் 2 மணியில் இருந்து இரவு 7 மணி வரையும் ஆலய சுற்றுப்புற வீதிகளில் வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருக்கும்.

பருத்தித்துறை வீதியில் யாழ். மாநகரசபை பணிமனைக்கு முன்பாகவும் —

செட்டித் தெருவில் வழமையான இடத்திலும் —

கோவில் வீதியில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்துக்கு அப்பால் வழமையான இடத்திலும், சிறுவர் பாதுகாப்பு நிதிய பணிமனை முன்பாகவும் —

பருத்தித்துறை வீதியில் வைமன் வீதிச் சந்திக்கும் பாரதி சிலையடியிலும் வீதித்தடைகள் அமைக்கப்பட்டிருக்கும்.

வீதித்தடைகளுக்கு உட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவர்கள் தொழில் செய்பவர்களுக்கு தனித்தனியாக அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்பட்ட விசேட அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வீதித்தடைகளுக்கு காலை மாலை இருவேளைகளிலும் ஒரு மாநகரசபை அதிகாரி பொறுப்பாக இருப்பார்.

அதிகாலை வேளையில் வீதித்தடை போடுவதற்கு முன் வரும் அடியார்களின் துவிச்சக்கர வண்டிகளை ஆலயத்தின் தென்புறம் ஒதுக்குப்புறமாக விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

### நீர், மின் வழங்கல்

உற்சவ காலத்தில் குடிதண்ணீர் வழங்குவதற்கும், ஆலய வீதிகளுக்கு நீர் தெளிப்பதற்கும், மாநகர சபையின் நீர் வழங்கல் பகுதி ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது

ஆலய சுற்றுப்புறத்தில் நான்கு வீதிகளுக்கும், இந்து விடுதியின் பின்பக்கமும் தினமும் அதிகாலை 4.00மணி முதல் 6.30 மணிவரை மின் விளக்குகளைப் பொருத்தி ஒளி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்துக்கு ஒன்று விட்ட முறையே தாம் மின்வழங்குவதால் தினமும் மின்வழங்க முடியாது என்பதால் மின் விளக்குகளை மட்டும் பொருத்தித்தருவதாக மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் மாநகர சபையின் ஜெனரேட்டரில் இருந்தே மின்சாரம் வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

ஆலய வீதிகளைச் சுத்திகரிப்பதற்கென 15 சுத்திகரிப்புத் தொழிலாளிகள் தற்காலிக நியமனம் செய்யப்படுவார்கள்.

ஆலயத்தின் மேற்குப்புறத்தில் மாநகர சபையின் சுகாதாரப்பகுதியினது தற்காலிகபணிமனை அமைக்கப்பட்டு, முதலுதவி, சுகாதார சேவைகள், தொண்டர் சேவையிலீடுபடும் நிறுவனங்களின்ஒழுங்குபடுத்தல் ஆகியன கவனிக்கப்படும்.

### தொண்டர் நிறுவனங்கள்

உற்சவ காலத்தில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரணா இயக்கம், மக்கள் நலன் புரிக்கழகம், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் முதலியதொண்டர் அமைப்புகள் தமது சேவையையவழங்கும்.

வீதி ஒழுங்கு கடமையில் ஈடுபடும் தொண்டர்கள் பற்றிய பெயர் விவரங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக மாநகர சபையிடம் தருவிக்கப்பட வேண்டும். சேவையிலீடுபடும் தொண்டர்களுக்கு மாநகரசபையின் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

உற்சவ காலத்தில்அடியார்களால் தவறவிடப்படும் தங்கநகைகள், பெறுமதி மிக்க பொருள்கள், அடையாள அட்டைகள் முதலியவற்றை எவராயினும் மேற்கு வீதியில் அமையும் மாநகரசபையின் அலுவலகத்தில் ஒப்படைத்து பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

(ஐ-ரீ-30)

# 25 ஆயிரம் குடும்பங்களை அழைத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். மாவட்டத்தில் இவ்வருடமுடிவிற்குள்இருபத்தையியாரம் குடும்பங்களைமீளக்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்றவர்களை திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் அழைத்து வந்து மீளக்குடியமர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்தமாதம் தொடக்கம் இந்த அகதிகள் கப்பலில் அழைத்து வரப்படுவார்கள். இதற்கென கொரிய நாட்டு கப்பல் ஒன்று வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் மூலம் இவ் வருடமுடிவிற்குள் 25 ஆயிரம் குடும்பங்களை அழைத்து வருவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அழைத்து வரப்படும் இவர்கள் தமது சொந்த வீடுகளிலோ அல்லது உறவினர் வீடுகளிலோ தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

சொந்த வீடுகளில் மற்றும் உறவினருடன் தங்க முடியாதவர்களுக்கு தற்காலிக குடிசைகள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன.

(ஐ-5)

## அமைச்சரின் செயலாளரின் வீட்டின் நடுவே மனிதப் புதைகுழி?

கொழும்பு, ஜூலை 27

அமைச்சர் ஒருவரின் பிரத்தியேக செயலாளரின் வீட்டுக்கு நடுவே மனிதப்புதைகுழி இருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்த வீடு பட்டலந்த வதை முகாமுக்கு அருகில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தனது வீட்டின் மத்தியில் புதைகுழி இருப்பதாக அவர் அதிகாரிகளுக்கு அறிவித்ததாகவும்—

அதனையடுத்து அதிகாரிகள் அந்த வீட்டைச் சென்று பார்வையிட்டனர் எனவும்— தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வீட்டில் இருந்தவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு அதிகாரிகள் அறிவித்துள்ளனர். அது தவிர அதிகாரிகளால் வேறு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் அமைச்சரின் பிரத்தியேக செயலாளருக்கு இந்த வீடு வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் அந்த வீட்டைத்திருத்த முற்பட்டபோது அந்த வீட்டின் நடுப்பகுதியில் சில இடங்களில் தரை இறக்கம் ஏற்பட்டதைத்தொடர்ந்து அவர் அது ஒரு மனிதப் புதைகுழி எனக் கண்டு கொண்டார்.

இந்தப் புதைகுழியினுள் 30 முதல் 40 பேரின் எலும்புக்கூடுகள் இருப்பதாகத் தாம் நம்புவதாகவும் அவர் அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்—

இவ்வாறு கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-9-10)

# செய்திக் கொத்து

### விமானத்தில் கோழிக்குஞ்சு

வடமராட்சி ஜூலை 27

ஐயாயிரம் புறோயிலர் கோழிக்குஞ்சுகள் இம்மாதம் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப் படவுள்ளன.

புறோயிலர் கோழிக்குஞ்சுகள் தேவையானோர் அவ்வப்பகுதி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-173)

### நெடுந்தீவுக்கு புதிய சந்தை

நெடுந்தீவு, ஜூலை27

நெடுந்தீவு பிரதேசசபை புதிய சந்தைக் கட்டடம் ஒன்றை விரைவில் அமைக்கவுள்ளது. வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை இதற்கென ஐந்து லட்சம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது. புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நெடுந்தீவு பிரதேசசபையின் தொடக்க விழாவில்கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் நாட்டார். புலவர் அ. வெ. அரியநாயகம் தலைமையில் இந்த வைபவம் இடம் பெற்றது.

(ஐ-111)

### பொது அறிவுப் போட்டி

சுன்னாகம், ஜூலை 27

சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான சுவர்ணாம்பிகாதேவி மஹோற்சவத்தை ஒட்டி, ஆலய நிர்வாகத்தினர் சமய அறிவுப் போட்டியொன்றை நடத்துகின்றனர்.

இதில் முதலாவது இடத்தைப் பெறுபவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப் படவுள்ளது.

(ஐ-27)

### தேர்த்திருவிழா சிறப்பிதழ்

கொழும்புத்துறை, ஜூலை 27

கொக்குவில் நந்தாவில்—கற்புலத்து அருள்மிகு ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்தினரால் தேர்த்திருவிழாச் சிறப்பு நூல் அண்மையில் நிலைய முன்றலில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிறப்பிதழின் முதற்பிரதியை நிலையத்தின் மூத்த உறுப்பினர் அ. இராசையா வெளியிட்டு வைத்தார்.

(ஐ-30)

### குழாய்க் கிணறு அமைப்பு

சுன்னாகம், ஜூலை27

ஏழாலை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு புதிதாக குழாய்க் கிணறொன்று அமைக்கப்பட்டுள்ளது.

15 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இக்கிணற்றை பெற்றோர்கள் ஒன்று சேர்ந்து அமைத்துள்ளதாக பாடசாலை அதிபர் மு. செல்வஸ்தான் தெரிவித்தார்.

இதேவேளை—

கந்த இராணுவ நடவடிக்கையின்போது இப்பாடசாலையின் மலசலகூடங்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்து போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-27)

### மாணவருக்கு போட்டிகள்

வடமராட்சி, ஜூலை 27

தும்பளை கிழக்கு சனசமூக நிலைய பொன்விழாவை ஒட்டி பருத்தித்துறை நகரப் பாடசாலை மாணவர்களிடையேயும், பெண்களிடையேயும் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, மனனம், பண்ணிசை ஆகிய போட்டிகளும், பெண்களிடையே கோலப்போட்டி, தையற் போட்டி என்பனவும் நடத்தப்படவுள்ளன.

(ஐ-173)

### நாய்கள் அழிப்பு

வடமராட்சி, ஜூலை 27

கட்டாக்காலி நாய்களின்தொல்லையையடுத்து நெல்லியடிப் பட்டினப் பகுதியிலும், கரவெட்டி இராஜகிராமத்திலும் பெருந்தொகையான கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டன.

நெல்லியடிப்பகுதிக்கான பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழு ஒன்று இந்தப் பணியையமேற்கொண்டது.

(ஐ-173)

### மருந்து விநியோகம்

திருநெல்வேலி, ஜூலை 27

யாழ். சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினரால் நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலைக்கான இவ்வருட இரண்டாம் காலாண்டிற்கான மருந்து வகைகள் கடந்தவாரம் விநியோகிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினரின் அனுமதி பெறப்பட்டதை அடுத்து இந்த மருந்து விநியோகம் செய்யப்பட்டது.

(ஐ-135)

### மதகு புனரமைப்பு

சண்டிலிப்பாய், ஜூலை 27

மானிப்பாய் சந்தைக்கு அண்மையிலிருக்கும் பிரதான வீதியிலுள்ள மதகு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. கடந்த பல வருடங்களாக இந்த மதகு சேதமடைந்திருந்ததால் இப் பகுதியில் மாரி காலத்தில் வெள்ளம் போக முடியாது தேங்கி வந்தது.

(ஐ-135)

### சுந்தரர் குருபூசை

சண்டிலிப்பாய், ஜூலை27

அளவெட்டி சைவ வாலிபர் சங்கம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் ஆலயத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

(ஐ-135)

### பல்கலைக்கழக மதகுரு

யாழ்ப்பாணம், ஜூலை27

யாழ். பல்கலைக் கழக வளாகத்தின் மதகுருவாக அடுத்த நான்கு வருடகாலத்துக்கு அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த வண. ஜே. ஜெயமோகன் பதவி ஏற்க உள்ளார். ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் இவர் கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று தெரிகிறது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் கடமை ஆற்றும் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த வண. மில்ரன் சொலமனின் பதவிக்காலம் முடிவடைகிறது.

(இ)

உ

# ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்

கொக்குவில்

## வருடாந்த மஹோற்சவம் - 1998

28 - 07 - 98 செவ்வாய்க்கிழமை — கொடியேற்றம் [முற்பகல் 11. 00 மணி]

01 - 08 - 98 சனிக்கிழமை — பக்த முத்திபாவன உற்சவம்

02 - 08 - 98 ஞாயிற்றுக்கிழமை — வசந்தோற்சவம்.

04 - 08 - 98 செவ்வாய்க்கிழமை — வேட்டைத்திருவிழா.

05 - 08 - 98 புதன்கிழமை — சப்பறத் திருவிழா

06 - 08 - 98 வியாழக்கிழமை — தேர்த்திருவிழா [காலை 8. 30 மணி]

07 - 08 - 98 வெள்ளிக்கிழமை — தீர்த்தோற்சவம் [காலை 8. 30 மணி]

தேர்த்திருவிழா பொது உபயமாக நடைபெறும்.

- பரிபாலனசபை

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில்.

( 57861 )

# விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து சென்றவர் விழுந்து படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் குருநகர் வீதிப்பகுதியில் கடந்த புதனன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாரந்தனையில் இருந்து இடம்பெயர்ந்து முத்திரைச் சந்திப்பகுதியில் வசிக்கும் பிரான்ஸிஸ் சிறில்வா (வயது 37) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். - (ஐ-15)

# 7,500 மெற்றிக் தொன் வெங்காயம் விளையும்

## பணிப்பாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வெங்காயச் செய்கையில் ஏழாயிரத்து 500 மெ. தொன் மொத்த விளைவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

உதவி விவசாய பணிப்பாளர் த. சிவலோகநாதன் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

இம்முறை 650 ஹெக்டயரில் வெங்காயச்செய்கை மேற்கொள்வதென திட்டமிடப்பட்டது. தற்போது 520 ஹெக்டயரில் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் 15 நாள்களுக்குள் 100 ஹெக்டயரில் செய்கை ஆரம்பித்து விடும். நாம் திட்டமிட்டபடி 650 ஹெக்டயரில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வெங்காயச் செய்கையில் கிடைக்கும் விளைவில் உணவுத் தேவை, விதைத்தேவை போன்றவற்றைக் கழித்து கணிசமான வெங்காயத்தை வெளி மாவட்டத்திற்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறினார். (ஐ-5)

# பதிவு செய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் நூலக உதவியாளர்களாக கடமையாற்றுவோரின் நலன்களைக் கவனிப்பதற்காக யாழ். மாவட்ட நூலக உதவியாளர் ஒன்றியம் அமைக்க ஏற்பாடாகி உள்ளது. எனவே உள்ளூராட்சி மன்ற பொதுசன நூலகங்களில் நூலக உதவியாளர்களாகக் கடமை புரிவோர் தமது பெயர் விவரங்களை உடனடியாக 'இலக்கம் 5, யாழ். வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நூலக உதவியாளர்களின் பதவி உயர்வு மற்றும் தொழிற் பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டோருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வசதியாகவே இந்த ஒன்றியத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (ஐ)

# தெல்லிப்பழையில் அமையும்

# இடைத்தங்கல் முகாமில் நலன்பேண ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 27

திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் அழைத்துவரப்படுபவர்கள் தங்க வைக்கப்படவுள்ள தெல்லிப்பழை இடைத் தங்கல் முகாமில் சிறுவர்களின் நலன்களை 'யுனிசெவ்', சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியனவும் —

சுகாதாரம் தொடர்பான தேவைகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் —

உணவு வழங்கலை யாழ். செயலகமும் பொறுப்பேற்றுக் கொள்ளும்.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக் கூட்டத்தில் 'யுனிசெவ்', சிறுவர் பாதுகாப்பு நிதியம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, யாழ். அரச அதிபர், அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருகோணமலையில் இருந்து அழைத்துவரப்படும் அகதிகளில் வீட்டு வசதி அற்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித் தனி வீடுகளை அவர்கள் விரும்பும் இடங்களில் அமைப்பதற்கு வசதியாக மரங்கள், கூரைத் தகடுகள் ஆகிய வீடு கட்டுவதற்குத் தேவையான பொருள்கள் வழங்கப்படும். அத்துடன் ஆதரவற்ற பெண்கள் தற்காலிக வீடுகளை அமைப்பதற்கு வேண்டிய இரண்டு கூலிகளின் செலவுகளை யாழ். செயலகம் ஏற்றுக் கொள்ளும்.

இவ்வாறு அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ஐ-6)

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## இரண்டு சில்லு உழவு இயந்திரம்

(லான்ட் மாஸ்ரர்)

## விற்பனைக்குண்டு

எமது சங்கத்திற்குச் சொந்தமான கே. 75, 72ஸ்ரீ 9445 இலக்கம் கொண்ட குபாட்டா லான்ட் மாஸ்ரர் (ஜப்பான்) பெட்டி, கலப்பையுடன் விற்பனைக்கு உண்டு. பெற்றுக்கொள்ள விரும்புவோர் 29 - 07 - 98 ஆம் திகதிக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
கோண்டாவில் ப. தெ. வ. அ. கூ. சங்கம்,
தலைமைக் காரியாலயம்,
கே. கே. எஸ். வீதி,
தாவடிச் சந்தி.

(சி/4385)

# அதிபருக்கு மணி விழா

யாழ்ப்பாணம், ஜூலை 27

கவிஞரும் பல்துறைக் கலைஞருமான கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளையின் மணிவிழா எதிர் வரும் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு க. ஸ்ரீசந்திரா தலைமையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை 'ரதிலக்ஷ்மி' மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இவ் விழாவில் ஓய்வு பெற்ற அதிபர் ஆ. சபாரத்தினம் ஆசியுரை வழங்குவார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு. பரஞ்சோதி, பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் வே. பத்மநாதன், யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் கலாநிதி க. குணராஜா, கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலா பொன்னம்பலம், திருமதி செ. பரமலிங்கம், திருமதி வதனி முரளி ஆகியோர் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளைக்கு வாழ்த்துரைகளை வழங்குவர்.

தொடர்ந்து விழா நாயகருக்கு பதக்கம் அணிவித்து பாராட்டுப் பத்திரம் வழங்கப்படும், அத்துடன் வாழ்த்துப்பாக்களும் வழங்கப்படும். (ஐ-6)

# கண்ணீர் அஞ்சலி

உயரப்புலம் ஆனைக்கோட்டை ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய பரிபாலன மூதவை உறுப்பினர்

## க. சி. கைலாசபிள்ளை

அவர்கள்

23 - 7 - 98 வியாழக்கிழமை அன்று கொழும்பில் காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பரிபாலனசபை, திருப்பணிச்சபை
உத்துங்க விநாயகர் ஆலயம்.

(55461)

விநாயகர் துணை

எம் மனதை விட்டு நீங்காத சோதியின்

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடி
05 — 01 — 1968



ஐங்கரன் தாள்
10 — 08 — 1994

அமரர் தம்பிஐயா இரவிச்சந்திரன் (ராசன்)

திதி: 27 - 07 - 98

முத்து முத்தான சித்திரமே— எம்
மனையில் உதித்த மாணிக்கமே— உனது
அருட்செயல்களை எண்ணி ஏங்கித் தவிக்கின்றோம்.
விரைவில் எம் மனைநாடி வாராயோ?
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உன்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

நவேந்திர கிரி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(55458)

# தென்னந் தோட்ட உழவு

ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான தோட்டங்கள் உழவு செய்யவிருப்பதால் உழவு இயந்திர உரிமையாளர்கள் ஓர் ஏக்கர் உழவு செய்வதற்குரிய கட்டணத்தை அறிவிக்கவும்.

சு. தவரத்தின சிங்கம்
பொறுப்பதிகாரி

ஜ. பெ. தோ. அ. ச. அலுவலகம்,
இத்தாவில்,
பளை.

(C/4387)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சைவபரிபாலன சபையினரின் 1997 ஆம் ஆண்டுக்கான சைவ நெறித் தேர்வில் யாழ். மாவட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்று அண்மையில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களால் வெள்ளிப் பதக்கம் வழங்கப் பெற்ற ஆண்டு 3 மாணவன்

## செல்வன் பிறைசூடிக்குரு சோழராஜன்

அவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பா.அ.ச., யா/ ஆறுமுக வித்தியாலயம்
சுழிபுரம்.

(57868)

# பஜாஜ்

பயண உலகில் பக்குவமாக பவனி வர
பஜாஜ் தயாரிப்புகள்

எம்- 80, KB 125, 4 எஸ், பொக்ஸர்
ஆகியவற்றை

சாவகச்சேரி நகரிலேயே பெற்றுக்கொள்ள
நாடுங்கள்:

பயண நாயகன் பஜாஜின் விற்பனை முகவர்

## குறிஞ்சி ரேடர்

இல. 9, நவீன சந்தை, மேல்மாடி,
சாவகச்சேரி.

(சி/ 4363)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## சாதனையல்ல

தென்னிலங்கையில் தமிழர்களுக்கு எதிரான மிகப்பெரிய வன்செயல் — தாக்குதல் — இனவிரோத நடவடிக்கை — நடத்தப்பட்டுப் பதினைந்து வருடங்கள் முடிந்து, பதினாறாவது ஆண்டு பிறந்துள்ள வேளை இது.

சிறுபான்மையினரான தமிழர்கள் சிங்களவர் தரப்பு வழங்கும் அற்ப உரிமைகள் சலுகைகளுடனேயே திருப்தி அடைந்து விட வேண்டும். அவ்வாறில்லை என்று சம உரிமைகள் தன்னாட்சி என்று கேட்டால் அடி போட்டுக் குட்டிக் குனியச் செய்து விட வேண்டும். பயமுறுத்தி வைக்க வேண்டும்; இயலுமானால் அழித்து விட வேண்டும் —

இத்தகைய ஒரு கொள்கையின் அல்லது நோக்கத்தின் அடிப்படையிலேயே 1983 ஜூலையில் தமிழருக்கு எதிராக காடைத்தனம் கட்ட விழ்த்து விடப்பட்டது. வாக்காளர் பட்டியல்களை வைத்துக் கொண்டு, வீட்டுக்கு வீடு தமிழர்கள் தேடித் தேடி கொல்லப்பட்டார்கள்; வெட்டப்பட்டார்கள்; எரிக்கப்பட்டார்கள். உடைமைகளும்சூறையாடப்பட்டன; தீயில் பொசுக்கப்பட்டன.

மனித நேயமோ, மனிதாபிமானமோ காருண்யமோ துளி அளவும் இல்லாமல் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித் தனம், அப்போது பதவியில் இருந்த ஜே. ஆரின் ஐக்கிய தேசியக்கட்சி அரசாலேயே அதன் தூண்டுதலாலேயே நடத்தப்பட்டது என்பது பின்னர் பரம இரகசியமாயிற்று. அது அரச பயங்கரவாதமே எனவும் இனங்காணப்பட்டது.

அத்தகைய ஓர் உலக அவமானம் தமது ஆட்சியில் மீள்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதில் இப்போதைய அரசுத் தலைவி மிகவும் கவனமாக உள்ளார் என்று அதன் ஆதரவாளர்கள் ஆரம்பத்தில் எழுதினார்கள், பேசினார்கள்.

ஆயினும் அதே அரசின் ஆட்சியில் தமிழர் பிரதேசத்தில் அவ்வப்போது அரச பயங்கரவாதம் தொடரவே செய்கிறது. தென்னிலங்கையில் மற்றொரு கறுப்பு ஜூலை வராது பார்த்துக் கொள்வது போல வடக்கு – கிழக்கில் அரச பயங்கரவாதம் தலைக்காட்டாமல் கண்காணிப்பதும் அவசியம்.

கடந்த 15 வருடங்களாகத் தொடரும் போருக்கு அடிப்படைக் காரணம் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படாமையே. அதனை நிவர்த்தி செய்வதெனில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்று காணப்பட்டாக வேண்டும்.

ஆனால் அரசு அதற்கான வழியில் செல்லாது எதிரான பாதையிலேயே நடக்கிறது. தான் தயாரித்த தீர்வுப் பொதியைத் தானும் முன்னெடுப்பதற்கு அரசினால் இயலவில்லை. தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படக் கூடாது என்ற தரப்பின் செல்வாக்கும், சக்தியும் அதிகரித்து விட்டது. அதிகாரப்பரவல் தானும் வேண்டாம் மாவட்ட நிர்வாகமே போதும் என்று சிங்கள ஆணைக்குழு சொல்லியுள்ளது.

இத்தகைய பின்னணியில் மீண்டும் ஒரு ஜூலை வராமல் தடுப்பது பெரும் சாதனையாகாது.

# அம்பிகையை அருள் வேண்டி துதிக்க சிறப்புடைய நாள் ஆடிப் பூரம்

உலக உயிர்களனைத்தையும் சிவத்துடன் பிரிவின்றிக் கலந்து நின்று காத்தருள்பவள் சக்தி. சக்தியை வழிபடுவதற்குரிய சிறந்த நாள்களில் ஆடிப் பூரத் தினமும் ஒன்றாகும்.

சூரியன் கர்க்கடக ராசியிலே சஞ்சரிக்கும் ஆடி மாதத்திலே வரும் பூர நட்சத்திரமே ஆடிப்பூரமாகும். சக்தியானவள் மண்ணுலகிலே உமையம்மையாக திரு அவதாரம் செய்த தினமாகவும், சக்தி ருதுவாகிய தினமாகவும் இத்தினம் கொள்ளப்படுகிறது.

ஆலயங்களிலே இத் தினத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளும், ருதுஷோபன வைபவமும், அம்பாள் திருவீதியுலாவரும் காட்சிகளும் இடம் பெறும்.

அம்பாள் ஆலயங்களிலே ஆடிப்பூர தினத்தைத் தீர்த்தோற்சவ தினமாக வைத்து மஹோற்சவங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன.

சக்தியை அலங்கரித்து அழகு பார்த்தவர் தாயுமானவர். சிற்றறிவாளர்களாகிய மனிதர் தெய்வத்தை அலங்கரித்து அழகு பார்க்காமல் தம்மை சிங்காரித்துத் திரிவதை எண்ணி மனம் வெதும்பி தன்னிலே பழியைப் போட்டு பின்வருமாறு பாடுகிறார்:

"உன்னைச் சிங்காரித்து
உன்னழகைப் பாராமல்
என்னைச் சிங்காரித்து
இருந்தேன் பராபரமே"

நவராத்திரி, கேதார கௌரி விரதம், வரலஷ்மி விரதம், ஆடிப்பூரம் போன்றன சக்தியை நினைத்து நோற்கப்படும் விரதங்களாகும்.

**இளவல்**

மனிதர்கள் மண்ணுலகில் விடும் தவறுகளை மன்னித்து சிவனிடம் வேண்டி அருள்பவள் சக்தியே. எமது நேர்த்திக்கடன்களை அம்பாளே விரைவில் நிறைவேற்றி வைக்கக்கூடிய தெய்வம் என்ற நம்பிக்கை இன்றும் எம்மத்தியில் நிலவுகிறது.

சக்தி உபாசகர்கள் அம்பாளுக்கு காவடி, கற்பூரச்சட்டி எடுத்தும், அடியளித்தும் விரதங்கள் அனுஷ்டித்தும் நேர்த்திகளை நிறைவேற்றுவர்.

விவாகமாகாத கன்னியர்கள் சிறந்த ஆடவரை கணவனாக அடைய வேண்டியும், சுமங்கலிப் பெண்கள் கணவனின் ஆயுட்பலத்தை அதிகரிக்க வேண்டியும், குழந்தைச் செல்வமற்றவர்கள் குழந்தைச் செல்வம்பெற வேண்டியும் ஆடிப்பூர நன்னாளிலே அம்பிகையை நோக்கி விரதமனுஷ்டித்து வழிபடுவர்.

அன்னையை வணங்கி அருள் பெற்றவர்களில் அபிராமிப்பட்டர், இராமகிருஷ்ணர், வீரசிவாஜி, குமரகுருபரர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அபிராமிப்பட்டருக்காக அன்னை தனது காதணியை கழற்றி வானத்திலே வீசி தை அமாவாசை தினத்தை பௌர்ணமி தினமாக பிரகாசிக்கச் செய்த அற்புதத்தை நாமனைவரும் அறிந்துள்ளோம். அம்பாளை நினைத்து உச்சரிக்கக் கூடிய தோத்திரங்களாக அபிராமி அந்தாதி, லலிதா சகஸ்ரநாமம், சகலகலாவல்லிமாலை, துர்க்கா அஷ்டகம் என்பன விளங்குகின்றன.

உமா, கௌரி, கல்யாணி, சாம்பவி, பார்வதி, பரமேஸ்வரி, மனோன்மணி என்றெல்லாம் மறுநாமங்கள் கொண்டு சக்தி அழைக்கப்படுகின்றாள். சக்தியை நாம் தினமும் வழிபட வேண்டுமாயினும் சிறப்புமிக்க ஆடிப்பூர தினங்கள் போன்ற நாள்களிலாவது அவளை வணங்கினால் உயர்ந்த பேறடையலாம். இன்றைய ஆடிப்பூர நன்னாளிலே நாமனைவரும் சக்தியை வணங்கி உய்வோமாக.

*

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஜூலை 27

வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் பூரணை தினம் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 27

புலோலி பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தான தீர்த்தோற்சவமும், ஆடிப்பூர விழாவும் இன்று திங்கட்கிழமை நடைபெறும். (ஐ-15-173)

★ ★ ★

தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை பகல் ஆடிப்பூரத் திருவிழா நடைபெற்று அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு திருவருள் பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

ஏழாலை களவாவோடை அருள்மிகு ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் கோயிலில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆடிப்பூர விசேட அபிஷேகமும், பூசையும் நடைபெறும். அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (ஐ-30)

★ ★ ★

சித்தன்கேணி கீரிமலை வீதி நாககன்னி அம்மன் ஆலய ஆடிப்பூர உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும். நாகசதுர்த்தி விரதம், விசேட பூசை அபிஷேகமும் அம்மன் திரு ஊஞ்சல் ஆடித் திருவீதி உலாவருவார். (ஐ-30)

★ ★ ★

வேலம்பராய் ஸ்ரீ வாலா பரமேஸ்வரி அம்பாள் ஆலய ஆடிப்பூர உற்சவமும், ருது சாந்தியும் இன்று திங்கள் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-7-30)

★ ★ ★

பண்டத்தரிப்பு பனிப்புலம் அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை ஆடிப்பூரம், தீர்த்தம் என்பன இடம் பெற்று மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

அச்சுவேலி புலக்குளம் பிள்ளையார் கோயில் மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (ஐ-118-30)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு புங்கன்குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு ஆடிப்பூரத் திருவிழா நடைபெறும். (ஐ-17-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 27

காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை ஆடிப் பூரத்தை முன்னிட்டு அம்பாளுக்கு விசேட அபிஷேகமும், பூசையும் நடைபெறும். (ஐ)

### நாளை

ஆடி -12

செவ்வாய்க்கிழமை

திதி: பஞ்சமி

முன்னிரவு: 11.54வரை.

நட்சத்திரம்: உத்தரம்

முன்னிரவு: 9.15 வரை.

நல்லூர்க் கந்தசுவாமி கொடியேற்றம்

சுபநேரம்: 4.33 - 6.03

ராகுகாலம்: 3.02 - 4.32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

படிப்போருடையகாலத்தை வீணாக்காமல் அதிகமான அறிவைக் கொடுக்கும் நூலை இயற்றும் ஆசிரியரே அதிக பயன் தருபவர் ஆவர்.

— [illegible] —

### மானிப்பாய்க் கடைகளில்

## பாவனைக்காலம் முடிந்த பல பொருள்கள் மீட்பு

மானிப்பாய் பட்டினப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த வெள்ளியன்று திடீர்ப் பரிசோதனை நடத்தப்பட்டு பாவனைக்கு உதவாத உணவுப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

மானிப்பாய் சுகாதாரப் பரிசோதகர் எஸ். ரவீந்திரன் இப் பரிசோதனையை நடத்தினார்.

உள்ளூர்த் தயாரிப்பான பெருமளவு குளிர்பான வகைகளும், ரின்-பால், ரின்மீன், என்பனவும் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களில் அடங்கும்.

பொருள்களை வாங்கும் போது பாவனைக்காலத்தை அவதானித்து வாங்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-185)

## இவர்கள் திருந்த மாட்டார்களா?

எனது மகன் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி இப்பொழுது சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆங்கில வகுப்பிற்கு மாலை நேரங்களில் செல்வதுண்டு. சென்ற வாரம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சென்று பாடம் முடிந்து வீடு திரும்பும் நேரம் கூட்டிச் சென்று கைதத்து விட்டு பிளேட்டினால் தலைமயிரை சிற்சில இடங்களில் வெட்டி விட்டார்கள். 16 - 07 - 98 வியாழன் அதே மாதிரி மாலை நேரம் இவர்களைக் கூட்டி வந்து சாவகச்சேரி வடக்கு அம்மன் கோவிலடியில் வைத்து சுருட்டு கொடுத்து பத்தும் படி கூறிவிட்டு பின் "தொட்டம் தொட்டமாக" மயிரை சீப்பும் போடமுடியாதளவு சிறிதாக வெட்டி அலங்கோலப் படுத்தி விட்டு விட்டார்கள்.

இன்றைய காலகட்டத்தில் இது செய்யக் கூடிய காரியமா? இப்படிச் செய்யும் பிள்ளைகளின் தாய் தந்தையர் என்ன செய்கின்றார்கள். பகிடிவதையினால் பேராதனையில்நடந்ததை மறந்து விட்டார்களா? அண்மையில் இரத்தினபுரி மாவட்டத்தில் நடந்ததை அறியவில்லையா தாய், தந்தையருக்கும்குருவுக்கும்கட்டுப்பட்டுநடக்கமாட்டாதவர்கள் நாளை நற்பிரசையாக வாழ முடியுமா? சென்ற வருடம் கந்தர்மடத்தில் நடந்த மாதிரி பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் திரண்டு வந்து இவர்களை நையப் புடைத்தால் என்ன செய்வார்கள்.

எனது மகன் இவ்வேதனையினால் கல்வியைத் தொடர முடியாமல் வந்தால், விசர் பிடித்தால் நாளை அவனுடைய வாழ்க்கை என்ன ஆவது? இன்றைய காலகட்டத்தில எமது தமிழினத்திற்கு பகிடிவதை முக்கியமா? ஒரு நேர செலவிற்கு நாம் (பெற்றோர்) படும் கஷ்டம் மேற்குறிப்பிட்ட மாணவர்களுக்குத் தெரியுமா? அல்லது விளங்குமா?

தி. பாலரத்தினம்

மீசாலை மேற்கு,
மீசாலை.

## உதவுத் தொகை வழங்கப்படுமா?

அண்மைக்காலஇடப் பெயர்வின் போதுஇடம்பெயர்ந்த அரச ஊழியர்களுக்கு மீளக்குடியமர்வின் பின அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வேதனங்கள், விசேட கொடுப்பனவுகள், உதவுதொகைகள் என்பன கணக்கிட்டு வழங்கப்படுகின்றன. ஆனால் ஏழ்மை நிலையிலுள்ள பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கு இடப்பெயர்வின் போது வழங்கப்படாத அப்பணத்தை மீளக் குடியமர்வின் பின் வழங்க சமூக சேவைகள் திணைக்களமும், அரச உயரதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது ஓர் அளப்பரும் சேவையாகும்.

சி. சபாநாதன்

வட்டுக்கோட்டை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தலைவர்கள் தங்கவுள்ள

# ஹோட்டல்களுக்கு ஜனாதிபதி திடீர் விஜயம்!

கொழும்பு, ஜூலை 27

'சார்க்' மாநாட்டில் பங்குபற்றுவதற்காக கொழும்பு வர இருக்கும் ஏனைய நாட்டுப் பிரதமர்கள் மற்றும் பிரமுகர்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்களுக்கும், மாநாடு நடைபெறவுள்ள பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க எந்தவித முன்னறிவித்தல்களும் இன்றி கடந்த வியாழன் இரவு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரில் கண்டறிந்தார்.

ஜனாதிபதி முதலில் தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கும், இன்ரர் கொன்டினென்ரல் ஹோட்டலுக்கும் விஜயம் செய்தார். பின்னர் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கும் நேரில் சென்று மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரீ)

### கொழும்பில்

# 160 வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள்

கொழும்பு, ஜூலை 27

கொழும்பு நகரில் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சார்க் மாநாடு தொடர்பான செய்திகளை உடனுக்குடன் தொகுத்தளிக்கும் பொருட்டு 160 வெளிநாட்டுச் செய்தியாளர்கள் இங்கு வருகை தரவுள்ளனர். இந்தியாவிலிருந்து மாத்திரம் 50 செய்தியாளர்கள் வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்தாவது சார்க் மாநாடு சர்வதேச மட்டத்தில் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளதால் அதிகமான வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் தமது செய்தியாளர்களை இங்கு அனுப்பி வைக்கவுள்ளன. நேற்று முதல் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கொழும்பு நகருக்கு வருகை தர ஆரம்பித்துள்ளனர்.

சார்க் மாநாடு தொடர்பான செய்திகளை வெளிநாடுகளுக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கும் பொருட்டு இன்டர்கொன்டினென்டல் ஹோட்டலில் தொடர்பு சாதன செயலகமொன்று திறக்கப்பட்டுள்ளதுடன் இங்கு வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கான தொலைபேசி, பக்ஸ் உட்பட சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதாக தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க தெரிவித்தார்.

(ஐ)

# 500 தமிழர்கள் கொழும்பில் கைது!

கொழும்பு, ஜூலை 27

கொழும்பில் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் [சார்க்] உச்சி மாநாட்டையொட்டி பொலிஸார் மேற்கொண்ட தேடுதல்களின் போது கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சுமார் 500-க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்புபிராந்தியத்தில் புறக்கோட்டை, மோதரை கொட்டாஞ்சேனை, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை ஆகிய பகுதிகளில் 37 பேர் மேல் விசாரணைக்காக பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேல்மாகாண தென் பிராந்தியமான கல்கிசை, நுகேகொடை, மொறட்டுவை, பாணந்துறை, களுத்துறைப் பகுதிகளில் 300-க்கும் மேற்பட்ட தமிழர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

களனி பொலிஸ் பிரிவில் வத்தளை, கந்தானை, ராகமப் பகுதிகளில் தேடுதல்களை மேற்கொண்ட பொலிஸார் 30 தமிழ் இளைஞர்களைக் கைது செய்து மேல் விசாரணைக்காக தடுத்து வைத்துள்ளதாக களனி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

[ஐ]

### மாநாடு நடக்கும் காலத்தில்

# 'இன்ரநெற்' மூலம் அரசசார்பு பிரசாரம்

கொழும்பு, ஜூலை 27

'சார்க்' உச்சி மாநாட்டுக் காலத்தில் இலங்கை தொடர்பான விவரங்களை வெளிநாடுகளுக்கு அறிவிப்பதற்காக வெளிவிவகார அமைச்சு 'இன்ரநெற்றில்' புதிய வலைப்பின்னல் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

உச்சி மாநாட்டுக் காலத்தில் உலகெங்கும் உள்ள பலர் இதை பார்ப்பார்கள் என்பதால் அரசின் பல்வேறு விடயங்கள் தொடர்பான பிரசாரத்திற்காகவே இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 ஆம் நூற்றாண்டு முதல் இலங்கை வெளிநாடுகளுடன் கொண்டுள்ள தொடர்புகள் பற்றிய விவரங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசார நடவடிக்கைகளைத் தடுக்கும் பத்திரிகை அறிக்கைகள், அரசாங்கத் தலைவர்கள் ஆற்றும் முக்கிய உரைகள் ஆகியவற்றுடன் இலங்கை தொடர்பான பல விடயங்கள் இந்த 'இன்ர நெற்றில்' இடம்பெறும்.

இந்த வலைப்பின்னல் 'சார்க்' உச்சி மாநாட்டை ஒட்டி ஆரம்பிக்கப்படுவதால் உச்சி மாநாட்டின் ஆரம்ப, இறுதி நிகழ்ச்சிகள் மற்றும் இதரமுக்கிய வைபவங்கள் என்பன நேரடியாக ஒளிபரப்பாகும்.

இப்புதிய 'இன்ரநெற்' வலைப்பின்னல் 'ஸ்ரீலங்கா வெப்சேர்வர்' என்ற பெயரில் அமெரிக்காவை [illegible] கொண்டு செயற்படும்.

[ஐ-ரி]

# தமிழர் பிரச்சினை தீர்வு குறித்தும் வாஜ்பாய் பேச்சுநடத்த வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்புக்கு வருகைதரும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகவும், அதற்கான நியாயமான தீர்வு குறித்தும் இலங்கை அரசுடன் பேசவேண்டும்.

ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு இவ்வாறு கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்நாட்டின் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒருநிரந்தரத் தீர்வைக் காணுமுகமாகவும், நடைபெற்றுக்கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வருமுகமாகவும் ஏற்படுத்தப்பட்ட இந்திய— இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பதினொரு வருடங்கள் உருண்டோடி விட்டன. இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இலங்கை இந்தியத் தலைவர்கள் இருவரும் இன்று நம்மிடையே இல்லை. அத்துடன் உருவாக்கப்பட்ட ஒப்பந்தமும் புதுடில்லியிலும் கொழும்பிலும் சீண்டுவாரற்றுப் போயிருக்கின்றது. அதே சமயம் எந்தத் துன்பங்களும், துயரங்களும் தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அவை இன்றும் தொடர்கதையாகவே உள்ளது. இலங்கைத் தமிழ் மக்களின் எந்த அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படும் என உறுதி அழிக்கப்பட்டதோ அவையும் இன்றுவரை கானல் நீராகவே உள்ளது.

இலங்கை அரசாங்கத்தினதும், புலிகளினதும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்திய அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் நாம் பல முறை எடுத்துக் கூறியும் கூட, தமிழ் மக்களின் நிலைமையில் எதுவித மாற்றமும் ஏற்படாதது ஏமாற்றத்துக்குரியது. தான் பதவிக்கு வந்ததும் சமாதானத்தைக் கொண்டுவருவேன் என உறுதிமொழி வழங்கி, தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் பதவிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களால்கூட சமாதானத்தைக் கொண்டு வரமுடியவில்லை. மாறாக இவ்வரசின் கொள்கையானது, யுத்தத்தை தீவிரப்படுத்தியதுடன் தமிழ் மக்கள் மீது சகல விதமான அடக்குமுறைகளையும் ஏவி விட்டுள்ளது.

மேற்குலக நாடுகளும் ஸ்கண்டிநேவியன் நாடுகளும் இப் பிரச்சினையைத் தீர்க்க மத்தியஸ்தம் வகிக்க முன் வந்ததை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையும் அதற்கான தீர்வும் இந் நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையே என்ற அடிப்படையில் இம் முனைப்புகள் சிறிலங்கா அரசினால் நிராகரிக்கப்பட்டன. அரசின் இந்த நிலைப்பாடானது, சிங்கள அரசியல் சக்திகளின் குறுகிய தேசிய வாதத்தையும் அதன் பலவீனத்தையுமே வெளிப்படுத்துகின்றது. எமது பிரச்சினைக்கு நாமே ஒரு தீர்வை ஏற்படுத்திக் கொள்வதற்கான அரசியல் வலுவும், துணிச்சலும், மனோவலிமையும் இந் நாட்டின் அரசியல் சக்திகளுக்கு இல்லை என்பதையே இன்றைய நாட்டு நிலைமை வெளிப்படுத்தி நிற்கின்றது.

1983 ஆம் ஆண்டிலிருந்தே இந்தியா இப் பிரச்சினையில் அக்கறை காட்டி வந்துள்ளது. இந்தியாவின் இந்த இடைவிடாத ஈடுபாட்டின் காரணமாகவே இலங்கை — இந்திய ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவ் வொப்பந்தம் நடைமுறைப்படுத்தப் படுவதை பிரேமதாசா அரசும் புலிகளும் சீர்குலைத்தபோதும் 13 ஆவது திருத்தச்சட்டமும் அதனையொற்றி வந்த மாகாணசபை ஆட்சி முறையும் இந்தியாவின் ஈடுபாட்டினால் தமிழ் மக்களுக்கு கிடைத்த அனுகூலமே என்பதை மறுக்க முடியாது.

துரதிர்ஷ்வசமாக திரு. ராஜீவ்காந்தி அவர்கள் புலிகளால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா தன்னுடைய ஈடுபாட்டை குறைத்துக்கொண்டது. இந்த நிலைப்பாடானது தமிழ் மக்களின் நலன்களுக்கு மிகவும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளுக்கு நிரந்தரத் தீர்வொன்றை எட்டுவதற்காக இப்பிரச்சினையில் ஈடுபடுவதற்கும், மத்தியஸ்தம் வகிப்பதற்குமான தார்மீகக் கடமை இந்திய அரசுக்கும், இந்திய மக்களுக்கு முண்டென, இலங்கைத் தமிழ் மக்களின் நலன்களை முன்னெடுக்கும் அரசியல் கட்சியென்ற ரீதியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுதியாக நம்புகின்றது. இதனடிப்படையில் 'சார்க்' மகாநாட்டுக்கு வருகை தரும் பாரதப் பிரதமர் இலங்கை அரசுடனான இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் போது, இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாகவும், அவர்களுக்கான நியாயமான தீர்வு சம்பந்தமாகவும் பேச வேண்டுமென நாம் கோருகின்றோம்.

இதனை வலியுறுத்து முகமாக வருகின்ற 29 ஆம்திகதி வடக்கு — கிழக்கின் சகல மாவட்டங்களிலும் உள்ள கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்களிலும், பாடசாலைகளிலும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பிரார்த்தனைக் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது — எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# கோண்டாவில் டிப்போ கட்டடங்கள் புனரமைப்பு

வடபிராந்திய போக்குவரத்துக்குச் சபையின் கோண்டாவில் சாலையில் உள்ள பாரிய வேலைத்தளம் மற்றும் பிராந்திய களஞ்சியம் போன்றவற்றில் புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

11 லட்சத்து 32 ஆயிரம் ரூபா செலவில் இக்கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றன.

இதேவேளை பருத்தித்துறைச் சாலையில் பாரிய வேலைத்தளமும் 7 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவருகிறது.

இம்மூன்று வேலைகளுக்கும் முறைப்படி கேள்வி கோரப்பட்டு வேலைகள் ஒப்பந்தகாரரிடம் வழங்கப்பட்டுள்ளதாகபோக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-5)

### இழப்பீடு வழங்க

# கிராம அலுவலர் பிரிவு ரீதியாக 8 வீடுகள் தெரிவு

வலிகாமம் மேற்கு. ஜூலை27

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் எட்டு வீடுகள் தெரிவு செய்யப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கையை வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா மேற்கொண்டுள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் முதற்கட்டமாக 200 வீடுகளுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

சுமார் 4ஆயிரம் பேர் இழப்பீட்டுக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் இருந்து 200 பேரைத் தெரிவு செய்வதற்கு அவ்வப்பகுதி கிராம உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சேதமடைந்த வீடுகளைப் பார்வையிட்டு தெரிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ)

### படைகளில் பணிபுரியும்

# கணவனும், மனைவியும் போர் முனைக்கு வேண்டாம்!

கொழும்பு, ஜூலை 27

ஆயுதப்படைகளில் பணிபுரியும் தம்பதியரை வடக்கிலும் கிழக்கிலும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளில் ஒரே இடத்தில் கடமையில் ஈடுபடுத்த வேண்டாம் என்று மகளிர் விவகார அமைச்சர் ஹேமாரட்ணாயக்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவிடம் கேட்டுள்ளார்.

ஒரே இடத்தில் இவர்கள் இருவரும் பணியாற்றுவதால் அவர்களது பிள்ளைகளுக்கு பல்வேறு பிரச்சினைகள் உருவாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார ரீதியாக பிள்ளைகள் பயன் பெற்றாலும் பெற்றோர்கள் இருவரும் இல்லாமல் இருப்பதால் குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுவர். எனவே கணவனும் மனைவியும் ஆயுதப்படையில் அல்லது பொலிஸில் பணியாற்றினால் அவர்களில் ஒருவரை இராணுவ நடவடிக்கை இடம்பெறாத பகுதிகளில் பணிபுரிய அனுமதிக்க வேண்டுமென்று அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1996 இல் பட்டம் பெற்றவர்களின் நியமனம் குறித்து முடிவு இல்லை

வலி.தென்.மேற்குஜூலை 27

1996 ஆம் ஆண்டு பட்டம் பெற்று இது வரை வேலை யற்று இருக்கும் யாழ். மாவட்ட பட்டதாரிகளின் நியமனம் தொடர்பாக இதுவரை மாகாணக் கல்வி அமைச்சு தெளிவான பதில் எதனையும் வழங்காததால் அவர்கள் குழப்ப நிலையில் உள்ளனர்.

இவர்களது நியமனம் தொடர்பாக எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் மாகாணக் கல்வி அமைச்சிடமிருந்த சாதகமான பதில் கிடைக்கும் என அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

மாகாண அமைச்சிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில்தாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் ஞாயிறன்று அவர்கள் கூடவுள்ளனர்.

1989 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து 1990—91 கல்வியாண்டுக்கு பல்கலைக் கழகம் சென்ற இவர்களுக்கு 1995 ஆம் ஆண்டு எனக்குறிப்பிட்டே பட்டம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இராணுவ நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட தடங்கல்களால் 1996 எனக் குறிப்பிட்டே இவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் 1990—91 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கு 1995 ஆம் ஆண்டு எனக்குறிப்பிட்டே பட்டம் வழங்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு பட்டம் பெற்றதால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 325 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-185)

# யாழ். மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கல்

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இவ்வருடத்துக்குரிய இலவச சீருடைகள் நாளை செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாக பாடசாலைகளில் வைத்து வழங்கப்பட உள்ளன. இதற்கான நடவடிக்கைகளை உடுவில் கல்விக் கோட்ட அதிகாரி அ. தற்பரானந்தன் எடுத்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் நாளை சகலருக்கும் வழங்கப்பட வேண்டுமென கல்வி, உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சீருடைகள் யாவும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக வழங்கப்பட வேண்டும் எனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளை இவ்வார முடிவுக்குள் அனுப்பிவைக்க முடியும் என அமைச்சு அறிவித்துள்ளது.

அதே சமயம் —

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளிலும் நாளை செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு வைபவரீதியாக ஒருசில மாணவருக்கு சீருடைகளை வழங்குவதற்கு தேவையான சீருடைகளை உடுவில் கல்விக்கோட்ட அதிகாரி பாடசாலை அதிபர்களிடம் கையளித்துள்ளார்.

(ஐ-152)


# எலைற் கல்வி நிறுவனம்

192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## ஆண்டு 9, 10 & G. C. E. O/L

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. T. அற்புதராஜா |
| விஞ்ஞானம் | — | திரு. K. பாலமுருகன் |
| ★ சமூகக்கல்வி | — | திரு. உங்கள் ஆசிரியர் ★ |
| தமிழ் | — | திரு. B. பாலகணேசன் |
| ஆங்கிலம் | — | திரு. S. பசுபதி |
| வர்த்தகம் | — | திரு. T. தர்மசீலன் |
| | — | திரு. K. கனகேஸ்வரன் |

பிரிவு II ஆரம்பம்: 01 - 08 - 1998

சனி காலை 8-00 மணி

குறிப்பு:

மாதாந்தப் பரீட்சைகளுடன் கூடிய விசேட வினாவிடை வகுப்புகள் நடைபெறுகின்றன.

(57898)



# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர்

கலாநிதி கா. குகபாலன்

அவர்களின் தந்தையார்

ச. கார்த்திகேசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் எமது துறைத் தலைவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஊழியர்கள்.

புவியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.

(57890)



# கண்ணீர் அஞ்சலி

புவியியற்றுறை தலைவரும், எமது புவியியற்கழக போஷகருமான

கலாநிதி கா. குகபாலன்

அவர்களின் அன்புத் தந்தையார்

சண்முகம் கார்த்திகேசு

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள்.

புவியியற்கழகம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(57895)



நல்லூர், வடமராட்சி 'லயன்ஸ்' கழகங்களும் அரங்க செயற்பாட்டுக்குழுவும்

இணைந்து நடத்தும்

# பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு
# க. பொ. த. உயர்தரம் (1998)

தூய / பிரயோக கணித பாடத்திற்கான மேலதிக கருத்தரங்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு (புதிய நேரம்) Science Hall இல் நடைபெறும்.

அரங்க செயற்பாட்டுக்குழு.

(57899)


# சார்க் மாநாட்டுபாதுகாப்பில் 6,000 பொலீஸார் ஈடுபடுவர்

கொழும்பு, ஜூலை 37

சார்க் மாநாட்டுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதையடுத்து தலைநகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பொலீஸ் மற்றும் முப்படைகளையும் உள்ளடக்கிய 6 ஆயிரம் பேர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

புதிய சோதனைச் சாவடிகள் பல அமைக்கப்பட்டு வாகனங்கள் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனையிடப்படுகின்றன.

உயர்ந்த கட்டடங்களின் மேல் படையினர் நிலை கொண்டு தூர நோக்கிகள் மூலம் தலைநகரில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சார்க் மாநாட்டுத் தலைவர்கள், பிரதிநிதிகள் பயணம் செய்யும் வீதிகளில் சகல வாகனப் போக்குவரத்துக்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சகல தலைவர்களும் நாளை மாலை வருகை தந்து 31 ஆம் திகதி மாநாடு முடிவடைந்த பின்பு திரும்பி விடுவார்கள் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-21)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கொக்குவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் — சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

சைக்கிளை ஓட்டிச்சென்றவரான, வேலணையில் இருந்து இடம் பெயர்ந்து கொக்குவிலில் வசிக்கும் சின்னவன் வேலாயுதம் (வயது65) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## தாக்குதலில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

இருட்டில் மறைந்திருந்து வீதியால் வந்தவரைக் கம்பியால் அடித்துத் தாக்கியதில் ஒருவர் தலையில் படுகாயமடைந்தார்.

கோப்பாய்வடக்கில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் வல்லிபுரம் யோகராசா (வயது 38) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 27

'உதயன்' நிறுவனம் மற்றும் யாழ். றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அவை நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டங்கள் இன்று பிற்பகல் பல்கலைக்கழக கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவிருக்கின்றன.

ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி—ஜொலி [illegible] எதிர் யுத்தகிராம [illegible] (ஆண்)

★ உதயன் எதிர் சென்றலைட்ஸ் (ஆண்). (இ-3)

## காச நோய்ச் சிகிச்சை:

# நிலையக் கட்டடத்தை திருப்பித் தர கோரிக்கை

தற்போது இராணுவத்தினரின் பாவனையிலுள்ள இலங்கைத் தேசிய காச நோய்த் தடுப்புச் சபையின் சிகிச்சை நிலையத்தை மீண்டும் நிலைய நிர்வாகத்திடமே ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். நகர படைத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸுக்கு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

யாழ். செயலகத்தின் தென் கிழக்கு மூலையில் அமைந்துள்ள காச நோய்ச் சிகிச்சை நிலையம் இராணுவத்தின் வசம் இருப்பதனால் இந்த நிலையம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்னுள்ள கட்டடம் ஒன்றிலே வசதிகளற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

எனவே இந்த சிகிச்சை நிலையத்தின் சொந்தக் கட்டடத்தை மீளவும் ஒப்படைக்கும் பட்சத்தில் அங்கு நோயாளர்களை வைத்து சிகிச்சை செய்ய முடியும் என்றும் —

இதனால் காச நோய் உள்ள நோயாளிகள் கொழும்பு சென்று சிகிச்சை பெறுவதில் எதிர் நோக்கும் கஷ்டங்களில் இருந்து விடுபட முடியும் என்றும் —

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)

# வீதியில் கற்குவியல்கள் போக்குவரத்து பாதிப்பு

வீதி திருத்துவதற்கென வீதியின் நடுவில் குவிக்கப்பட்டிருக்கும் கற்குவியல்களினால் வீதிப் போக்குவரத்துத் தடைப்பட்டிருப்பதுடன், இரவு வேளைகளில் விபத்துக்களும் ஏற்பட்டுவருகின்றன.

திருநெல்வேலி பிள்ளையார் வீதி மற்றும் தாளையடிவீதி ஆகியவற்றைத் திருத்துவதற்கென கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு கொண்டு வரப்பட்ட கல் மற்றும் கிணற்று மக்கி என்பன வீதிகளின் நடுவே குவிக்கப்பட்டுள்ளன.

இதனால் மேற்குறிப்பிட்ட வீதிகளின் ஊடான போக்குவரத்துக்கள் கடந்த ஒரு வாரமாகத் தடைப்பட்டுள்ளன.

இதேவேளை வீதிப்போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருப்பது குறித்து தெரிந்து கொள்ளாமல் இரவு வேளைகளில் பயணம் செய்த பலர் பலத்த காயங்களுக்கும் உள்ளாகிய சந்தர்ப்பங்களும் இடம்பெற்றன.

(ஐ-7)

## 'றுகுணு' மினி ஒலிம்பிக்:

# 2 ஆவது தொகுதி வீரர்கள் அடுத்த மாதம் செல்வர்

வலி.தென்மேற்கு, ஜூலை 27

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஆறாவது "மினி ஒலிம்பிக்" போட்டியில் இம் முறை யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து 140 க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர்.

றுகுணு பல்கலைக் கழகத்தில நடைபெறவுள்ள இந்த ஆறாவது மினி ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ள இரண்டாவது தொகுதி வீரர்கள் அடுத்த மாதம் 14 ஆம் திகதி புறப்படவுள்ளதாக விளையாட்டுத் துறை ஆலோசகர் மா. நடராஜசுந்தரம் தெரிவித்தார்.

கடந்த 1995 இல் இடம்பெற்ற மினி ஒலிம்பிக்போட்டியில் யாழ். பல்கலைக்கழக கால்பந்து அணி தங்கப்பதக்கம் பெற்று சாதனை புரிந்தது தெரிந்ததே—

இதேவேளை கடந்த மினி ஒலிம்பிக் போட்டியில் ஹொக்கி அணி திறமையாக விளையாடிய போதும் அணி பதக்கம் எதனையும் பெற்றுக்கொள்ளாதது குறிப்பிடத்தக்கது.

(ஐ-185)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பில் இருந்து யாழ். செல்ல

# அனுமதி கிடைப்பதில் இருந்துவரும் காலதாமதம் விரைவில் நீங்கும்

## இந்துக்குருமாரிடம் ஜனாதிபதி உறுதி

கொழும்பு, ஜூலை 27

யாழ்ப்பாணம் செல்வதற்காக கொழும்பில் பொலீஸ் நிலையங்களில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் பயணிகளுக்கு இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்துக் குருமார்களிடம் உறுதி அளித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இந்துக் குருமார் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தியபோது ஜனாதிபதி இந்த உறுதி மொழியை வழங்கினார் என்று இந்து மத குரு பீடத்தின் ஸ்தாபகரும், இலங்கை பிராமண சமாஜத்தின் தலைவருமான ஸ்ரீ சபரிமலை சாஸ்தா பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்ப சிவ சிவாச்சாரியார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செல்லும் நோக்கில் விமானப் பயண விண்ணப்பங்களை பொலீஸ் நிலையங்களில் சமர்ப்பித்த பின்னரும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறுவதற்காக மூன்று அல்லது நான்கு மாதங்கள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை தற்சமயம் காணப்படுகிறது.

எனவே அனுமதியை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்துக் குருமார் ஜனாதிபதியிடம் கோரியபோதே ஜனாதிபதி மேற்கண்ட உறுதிமொழியை வழங்கினார்.

அதிகளவு விண்ணப்பங்கள் வந்து சேர்வதனாலேயே அனுமதி வழங்குவதற்குக் காலதாமதம் ஏற்படுகின்றது. எனினும் முடிந்த வரையில் விரைவாக வழங்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிப்பதாகவும் ஜனாதிபதி உறுதி அளித்தார்.

இந்து சமய கலாசார அலுவல்களுக்கு என ஓர் அமைச்சு முன்பு இயங்கியது. அதன் மூலம் எமது பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்கக் கூடியதாக இருந்தது. ஆனால் தற்போது இருக்கும் இந்துசமய கலாசாரத் திணைக்களத்துக்கு அதிக அதிகாரங்கள் இல்லை. இதனாலும் எமக்குப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. சமய கலாசார அலுவல்கள் அமைச்சுக்குக் கடிதம் எழுதினால் சுமார் ஆறு மாதங்கள் ஆனாலும் பதில் வருவதில்லை. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இந்துக் குருமார் கோரியுள்ளனர்.

இவை தொடர்பாகவும் தாம் விரைவாக நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார் என அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

### மட்டக்களப்பு - கொழும்பு

# வாகனங்கள் மீது தீவிர கண்காணிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 27

மட்டக்களப்பு, கொழும்பு போக்குவரத்து வாகனங்கள் மீது விழிப்புடன் இருக்குமாறு பொலீஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சார்க் மாநாட்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளில் மேற்படி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, கொழும்பு வீதியிலுள்ள சோதனைச் சாவடிகளில் தீவிரசோதனைகள் இடம் பெறுகின்றன.

திடீர் சோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. (இ-21)

# வாய்க்கால் திருத்தவேலை செய்வோருக்கு உலருணவு

வலி.தென்மேற்கு, ஜூலை27

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் சேத் வெண்கண்டி வாய்க்கால் திருத்த வேலைகளில் ஈடுபடுவோருக்கு அடுத்த இருவாரத்தில் உலக உணவு ஸ்தாபனத்தின் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் தெரிவித்தார்.

ஆண்-பெண் இருபாலரும் ஈடுபட்டு வரும் இத் திருத்த வேலைகள் தொடர்ச்சியாக நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

நவாலி விவசாயிகள் சம்மேளன நிர்வாகிகளால் வாய்க்கால் திருத்த வேலைகள் மேற் பார்வை செய்யப்பட்டு வருகின்றன. (ஐ-185)

## மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். போதனா வைத்திய சாலையின் ஈ.சி.ஜி பிரிவு கடந்த பத்து நாள்களின் பின்னர் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. (இ-139-15

# தகவல் தந்த சிப்பாய் விரைவில் செம்மணிக்கு அழைத்து வரப்படுவார்

## இரகசியப் பொலீஸ் அனுமதி கோருகிறது

கொழும்பு, ஜூலை 27

செம்மணியில் சுமார் 400 பொது மக்களின் சடலங்கள் புதைக்கப்பட்டதாக தெரிவித்த கிருஷாந்தி கொலை வழக்கின் முதலாவது எதிரியான சோமரத்தின ராஜபக்ஷ விரைவில் செம்மணிக்கு அழைத்துவரப் படுவார்என்று எதிர்பார்க்கப் படுகிறது.

சோமரத்தின ராஜபக்ஷவை செம்மணிக்கு அழைத்துச் செல்ல சிறைச்சாலை அத்தியட்சகரிடம் இரகசியப் பொலீஸார் அனுமதி கோரியுள்ளனர்.

கடந்த வியாழக் கிழமையும், வெள்ளிக்கிழமையும் இரகசியப் பொலீஸாரும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும் அவரின் வாக்குமூலத்தைச் சிறைச்சாலையில் வைத்துப் பதிவு செய்ததையடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வழக்கின் மற்றொரு எதிரியின் வாக்குமூலம் இன்றும், நாளையும் பதிவு செய்யப்படவிருக்கின்றது.

அதே நேரம் — கொழும்பு பல்கலைக்கழக உடற் கூற்றியல் நிபுணர்களை செம்மணிக்கு அழைத்து வந்து ஆய்வு செய்ய தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. ((இ-3-10)

## நல்லூர் கந்தன் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் நடைபெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் ஆலய வீதியில் சமயச் சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள் என்பன நடைபெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-9)


5 ஆவது பிரிவு

ஆரம்பம்:- 01-08-1998

OXFORD

English Academy

ஆலடிப் பிள்ளையார் வீதி,

சுப்பர் மடம்,

பருத்தித்துறை

(அனுமதிக்கு முந்துங்கள்)

(57800)


### நீர்கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

யப்பட்டது.

பிளாஸ்டிக் பெட்டி ஒன்றில் இந்தக் குண்டு வைக்கப்பட்டிருந்தது.

அந்த வழியால் வந்த சிறுவனொருவன் அதனை வீட்டுக்கு எடுத்துச் சென்று திறந்து பார்த்தபோது குண்டு இருந்தது தெரிய வந்தது.

தகவலறிந்த விமானப் படையினர் விரைந்து வந்து குண்டைச் செயலிழக்கச் செய்தனர். (இ-21)

# இந்திய - பாக். வெளியுறவு செயலர்கள் சந்தித்தனர்

கொழும்பு, ஜூலை 27

கொழும்பு வந்துள்ள இந்திய — பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் நேற்றிரவு சந்தித்துக் கலந்துரையாடினர்.

இரு நாடுகளும் அணுகுண்டு வெடிப்பு நடத்திய பின்னர் இரு நாடுகளின் உயர்மட்ட செயலர்கள் முதல் தடவையாக நேற்றே சந்தித்தனர்.

இந்திய வெளியுறவுச் செயலர் கே. ரகுநாத், பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சமசா அகமத் ஆகிய இருவரும் சந்தித்து எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவிருக்கும் வாஜ்பாய் — நவாஷ் ஷெரீப் சந்திப்புக் குறித்த நேர அட்டவணையை தயாரித்தனர்.

அணுகுண்டு வெடிப்பை அடுத்து எழுந்துள்ள நிலைமை, காஷ்மீர் பிரச்சினை ஆகியன தொடர்பாக இரு பிரதமர்களும் கலந்துரையாடுவர். (இ-3)

### பகிடிவதை...

(முதலாம் பக்கத் தொடர்)

காஷா என்பவர் பகிடிவதை காரணமாககடந்த வெள்ளிக் கிழமை உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக ஒன்பதுபேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எட்டு மாணவர்களும் அவர்கள் பயன்படுத்தியதாக கருதப்படும் ஓட்டோ ஒன்றின் சாரதி ஒருவருமே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-9)

### இன்று...

(முதலாம் பக்கத் தொடர்)

கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் உட்பட சமூகத்திலுள்ள அனைவரும் இன்று கறுப்புப்பட்டு அணிந்து இன்றைய தினத்தை துக்க தினமாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-9)

# பாதாள உலகக் குழுவை சேர்ந்த 120 பேர் கைது!

கொழும்புப் பிரதேசத்தில் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த 120பேர் நேற்று முன்தினம் இரவு பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

பாதாள உலகத்தவர்களின் வதிவிடங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் முற்றுகையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கிரனேட் மற்றும் வெடி மருந்துகளும்மீட்கப்பட்டன.

# வலி. வடக்கு செயலகம் துர்க்காபுரத்தில் அமையும்

சுன்னாகம், ஜூலை 27

வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலகம் தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு வடக்காக உள்ள அரசகாணி தெரிவு செய்யப்பட்டு, பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக பிரதேச செயலர் பத்தினியம்மா திலகநாயகம் தெரிவித்தார்.

செயலக கட்டட வேலைகளுக்கென பொது நிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சு 50 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலகம் தற்போது மல்லாகத்தில் தனியார் வீடொன்றில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. [ஐ-27]

### ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்)

இதனால் பதவியிழந்தவர்களுக்கு பதிலாக புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் வல்வெட்டித்துறை நகர சபை தலைவராக ரெலோ முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம், உப தலைவராக எஸ். சுந்திரசேகரம் ஆகியோரை நியமனம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரெலோ பேச்சாளரொருவர் நேற்று தெரிவித்தார். (இ-21)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
26 — 11 — 1927



ஆண்டவன் அடியில்
13 — 06 — 1998

**மாரிமுத்து சிவசுப்பிரமணியம்**
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

மின்னாமல் வந்த இடியால் — நாம்
நிலை தளர்ந்து போனோம் — அப்பா!
சொல்லாமல் சென்று — எம்
உள்ளமதைக் குத்திவிட்டீர்
உறங்காமல் நீர் இருந்து — எமை
வளர்த்த கதையை எண்ணி — விழிநீர்
சிந்தாமல் இருக்க முடியவில்லை!
அண்ணாரின் முக ஒளியில் அமைதிபெற
வேண்டுகின்றோம்!

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

இந்துக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(57853)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org